www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1 - 15 மார்ச் '91 6/8 விலை ரூ.2.00



உ.பி. - பீகார்: தாழ்த்தப்பட்டோர் படுகொலை!




## அமெரிக்க வங்கியிடம் இந்தியாவே அடமானம்

படிப்பகம்

www.padippakam.com

# கழக கண்மணிகளின் கட்சிப் பற்று!

அண்மையில் தி.மு.க. ஆட்சிக் கலைப்பைக் கண்டித்து தேசிய முன்னணி நடத்திய நாடு தழுவிய 'பந்த்' போராட்டத்தை முன்னிட்டு தமிழகத்தில் பலர் கைதானார்கள். அரசு தரும் புள்ளி விவரத்தைக் காட்டிலும் கூடுதலாக பல ஆயிரம் தொண்டர்களை போலீசு கைது செய்துள்ளதென புள்ளிவிவரம் கொடுத்தார் கருணாநிதி! கழகத் தொண்டர்களின் தியாகத்தை பறை சாற்றி மார்தட்டினார்!

ஆனால், தலைக்கு இத்தனை பேர் என கூலிக்கு ஆள் அனுப்பி போலீசுக்கு உதவியிருக்கிறார்கள் கழக முன்னோடிகள்! போலீசும் அதற்கு விசுவாசமாக கழகப் புள்ளிகள் மீது கைவைக்காமல் விட்டுவிட்டு அப்பாவிகளையும், போனவர் வந்தவர்களையும், சம்பந்தமே இல்லாத மாற்று அமைப்பினரையும் கைது செய்தது. இப்படி விவ்சாயிகள் விடுதலை முன்னணித் தோழர் ஜெயசீலன் திருக்காட்டுப் பள்ளியில் கைதாகி திருச்சி மத்திய சிறைக்குச் சென்றார். அங்கு அவர் சேகரித்து அனுப்பியவை இவை:

● ''சம்பாதிச்சவனெல்லாம் ஒருத்தனும் ஜெயிலுக்கு வரலை; நீயும் நானும்தான் இந்த போலீசுக்கு கிடைச்சுதா'' - இவ்வாறு பாப்பாநாட்டைச் சேர்ந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

● ''திருவிடைமருதூர் எஸ்.ஐ. ராஜசேகர் ஸ்டேசனில் உட்கார்ந்து கொண்டே தனது பகுதியிலிருந்து 20 பேர்களை கைது செய்த விதம் புத்திசாலித்தனமானது! முஜிபூர் ரகுமான், சின்னபுள்ள போன்ற வட்டார தி.மு.க. புள்ளிகள் ஒவ்வொருவருக்கும் ஸ்டேசனில் இருந்தவாறே ஒரு ஓலை அனுப்பினார் எஸ்.ஐ.! ஓலையில் கேட்டிருந்தவாறு வட்டார புள்ளிகள் தலைக்கு 5 பேரை அனுப்பி வைத்தனர். முடிந்தது வேலை!'' - இது ஒருவர் பேசியது.

● திருக்காட்டுப்பள்ளி போலீசு இன்ஸ்பெக்டருக்கு முக்கிய தி.மு.க. புள்ளிகள் மீது கைவைக்க கொஞ்சம் பயம்! 'பந்த்'துக்கும் வி.வி.மு. வினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது தெரிந்தும் வி.வி.மு. தோழர்களையும் மற்றும் கூலி விவசாயிகள், வந்தவர் போனர்களை எல்லாம் கைது செய்தது போலீசு. செங்கிப்பட்டியிலிருந்து விறகு வெட்டிக் கொண்டு திருக்காட்டுப்பள்ளிக்கு தனது மகனுடன் விற்பதற்கு வந்த ஒருவரை எவ்வளவோ கெஞ்சி மன்றாடியும் விடாது திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பி வைத்தார் இன்ஸ்பெக்டர். 50 வயதான அவர் சிறையில் அழுது கொண்டே இருந்தார்.

● சிறையில் கழக பிரமுகர்கள் குடிகூீட்டாட்டம் என பொழுதைக் கழித்தனர். ஆனால், ஆயிரக்கணக்கான ஏழைத் தொண்டர்கள் பசியாலும், கவலையாலும் ஏங்கித் தவித்தனர். ''எவனெவனோ சாப்புடுறதுக்கு நாம ஏன் இப்படி சாகணும்? இனி இந்த கட்சியே நமக்கு வேண்டாம்'' என பலர் பேசினர்.

● ''எல்லா பகுதி எம்.எல்.ஏக்களும் கைதான தன் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு சீட்டுகட்டு, வாழைப்பழம், பீடி சிகெரெட், சாராயம், பணம் என அனுப்பிக் கொண்டிருக்கும்போது நம்ம எம்.எல்.ஏ நமக்கு ஒன்னும் அனுப்பலையே? நமக்கு துரோகம் செய்துட்டாரே'' - என்று திருவையாறு பகுதியினர் பொருமினர்.

இதைபோல் வளைகுடாப் போரை எதிர்த்து சுவரொட்டி ஒட்டும் பொழுது கைதான கோவைப் பகுதியைச் சேர்ந்த தொழிலாளர் பிரச்சாரக் குழு தோழர்கள் போலீசு நிலையத்தில் சந்தித்த - பார்த்த சில சம்பவங்களைப் பற்றி எழுதியனுப்பியவை:

நாங்கள் லாக்-அப்பில் அடைக்கப்பட்ட போது 4 நபர்கள் இருந்தனர். இதில் இருவர் தி.மு.க. கட்சிக்காரர்கள். அண்மையில் தி.மு.க. நடத்திய 'பந்த்'தின் போது போதையில் கடைகளை மூடும்படி கலாட்டா செய்ததால் பிடித்து வரப்பட்டவர்கள். மற்ற இருவரில் ஒருவர் குடித்துவிட்டு பக்கத்து வீட்டாருடன் சண்டை போட்டதால் கைதானவர். இன்னொருவர் அய்யாசாமி என்ற பெயர் கொண்ட ஒரு அப்பாவி. கணபதி பகுதியில் ஜீவா பேருந்தை கல்லால் அடித்து நிறுத்தியதை வேடிக்கைப் பார்க்க வந்தவர். இவரது கை மணிக்கட்டு போலீசு அடித்ததில் பெரிதாக வீங்கி இருந்தது. பின்னர் இவரை துணியெல்லாம் கழட்டி ஜட்டியுடன் தனி அறைக்கு மாற்றிவிட்டனர்.

நாங்கள் அங்கிருந்த பொழுது மேலும் ஒரு தி.மு.க.காரர் கைது செய்து கொண்டு வரப்பட்டார். இவர் சந்திரசேகர் கொடும்பாவி எடுத்துக் கொண்டு வரும் போது பிடிபட்டவர். ஆனால், தான் கொடும்பாவி எடுத்து வந்ததை ஒத்துக் கொள்ள மாட்டேன் என்றார். மாலை 3 மணியளவில் ஒரு தி.மு.க. இளைஞர் வந்து நானும் என்னுடன் சிலரும் 5 மணிக்கு ரத்தினபுரியில் ரயில் மறியல் செய்கிறோம் என்று மனு கொடுத்தார். போலீசு இவரை பிடித்து வைத்துக் கொண்டு ரத்தினபுரியில் மீதியுள்ளவர்களை கைது செய்ய ஓடியது. ஆனால் அங்கு அவர்கள் போலீசு வேனைப் பார்த்ததும் தப்பியோடி விட்டனர் எனத் தெரிய வந்தது. மாலை 6 மணிக்கு அந்த இளைஞரின் தம்பி வந்து ''நிலைமை மோசமாக இருக்கிறது; போராட்டம் நடத்தவில்லை என எழுதி கொடுத்துவிட்டு வந்து விடுங்கள்'' என்று கூறினார். மொத்தத்தில் தி.மு.க. கட்சிக்காரர்கள் யாரும் ஆட்சியைக் கலைத்தது தவறு; ஆகவே, கொடும்பாவி எரிப்பு, மறியல் செய்தோம் என்று தைரியமாக ஒத்துக் கொள்ளவே இல்லை.



# மதவெறிக்கு எதிராக மனித சங்கிலிப் போராட்டம்

வீதியில், வீட்டில், மருத்துவ மனையில்... கொத்து கொத்தாக குற்றுயிரான மனித உடல்கள்; மரணத்தின் ஓலங்கள்! தவழும் குழந்தை, தள்ளாடும் மூதாட்டி, உழைத்து உருக்குலைந்து போன தொழிலாளி - எவரையும் இனம் பிரித்துப் பார்க்காமல் வெட்டிச் சாய்க்கிறது மதவெறி.

மதவெறி அபாயத்திற்கெதிராகவும், மனித நேயத்தை வலியுறுத்தியும் 30.1.90 அன்று மாலை அதிராம்பட்டினத்தில் மனித சங்கிலிப் போராட்டம் நடந்தது. அதிரை நகர தொழிற்சங்க கூட்டமைப்பு இப்போராட்டத்தை நடத்தியது. தொலைத் தொடர்பு, வங்கி, மருத்துவம், ரயில்வே, மின்சாரம், உப்புத் துறை முதலான ஊழியர் சங்கங்களும் பள்ளி - பல்கலைக்கழக ஆசிரியர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், மாணவர்கள், உழைக்கும் மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். 200க்கும் மேற்பட்டோர் பங்கெடுத்துக் கொண்ட இப்போராட்டம் சிறந்த வீச்சை ஏற்படுத்தியது. அதிரை அண்ணாசிலை முன் நடந்த விளக்கக் கூட்டத்தில், தொழிற்சங்க பிரதிநிதிகள் பலர் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் தலைமையில் உரையாற்றினர்.

700க்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று கேட்டு ஆதரவளித்தனர்.

தொழிற்சங்கங்கள் பொருளாதார வாதத்தில் - தொழிற்சங்க போராட்டங்களில் மட்டுமே மூழ்கிக் கிடக்காமல் மக்கள் பிரச்சினைக்காகப் போராட வீதிக்கு வந்தது வரவேற்கத்தக்கது!

— தகவல் : காமராஜ், அதிரை.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

8

1 - 15 மார்ச் '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:

செ.மதியழகன்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ஏகாதிபத்திய வெற்றியும் எதிர்விளைவுகளும்

வளைகுடாப் போர் மிக மிக முக்கியமான திருப்பத்தையும் உச்சகட்டத்தையும் எட்டியிருக்கிறது. ஆக்கிரமித்த குவைத்தில் எதிர்பாராத, விரைவான தோல்வியைச் சந்தித்த சதாம் உசைன் அங்கிருந்து படை விலக்கத்தை அறிவித்ததைத் தொடர்ந்து, ஈராக் இராணுவம் தப்பியோடுகிறது. சதாமின் அறிவிப்பை ஏற்க மறுத்த ஏகாதிபத்திய இராணுவம் தப்பியோடும் ஈராக்கியப் படைகளைச் சுற்றிவளைத்து அழித்தொழிக்கும் கோழைத்தனமான, குரூரமான, கொலைவெறித் தாக்குதல் நடத்துகிறது. போர்நிறுத்தம் - சமாதான முயற்சிகள் அனைத்தையும் அடாவடித்தனமாக நிராகரித்துவிட்டு போரைத் தொடர்ந்து நடத்துகின்றது. ஒருவேளை, சதாம் உசைன் தன் படைகளை மீண்டும் ஒன்றுதிரட்டி தற்காப்பு நிலையில் கணிசமான காலம் போரை நீட்டிப்பாரேயானால் பேரம் பேசுவதற்கு பணயமாக முடிந்த அளவு அதிகமான ஈராக்கியப் போர்க் கைதிகளையும் தெற்கு ஈராக்கையும் கைப்பற்றி வைத்துக் கொள்வது ஏகாதிபத்தியப் படைகளின் உடனடி செயல் தந்திர நோக்கமாக இருக்கிறது. ஆனால் சதாம் உசைன் தலைமையிலான ஈராக்கின் ஆளும் கும்பலைக் கொன்றொழிப்பது; ஈராக்கிடம் உள்ள அதிநவீன ஆயுதங்கள், "குடியரசு காவற்படை" எனப்படும் மேல்தட்டு இராணுவப் பிரிவு உட்பட அதன் இராணுவ இயந்திரத்தையே தகர்ப்பது; ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் ஏகாதிபத்திய எடுபிடிகளின் அரசை நிறுவுவது - ஆகியவற்றை இலக்காக வைத்துதான் இந்தப் போரை ஏகாதிபத்தியங்கள் துவக்கியுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய ஏகாதிபத்தியங்களை உள்ளடக்கிய ஒரு இராணுவ ஒப்பந்தத்தை வளைகுடா நாடுகள் அனைத்தின் மீதும் திணிப்பது; அதிநவீன அறிவியல் - நுட்ப ஆயுதங்கள் எதையும் அந்தப் பிராந்திய நாடுகள் வைத்துக் கொள்ளக்கூடாது; இத்தகைய ஆயுதங்களுடன் கூடிய ஏகாதிபத்தியங்களின் கூட்டுப்படையும் அதன் கீழ் அந்தப் பிராந்திய நாடுகளின் மரபுவழி ஆயுதந்தரித்த இன்னொரு கூட்டுப்படையும் நிறுவப்படும். இவை ஏகாதிபத்தியங்களின் போருக்குப் பிந்திய காலத்துக்கான திட்டமாகும். எண்ணெய் வளமும் கடல்வழி யுத்ததந்திர முக்கியத்துவமும் வாய்ந்த வளைகுடாவை நிரந்தரமாக ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் வைத்து சூறையாடும் இந்த நவீன காலனிய நோக்கங்களை மேற்கத்திய அரசுத் தலைவர்கள் பகிரங்கமாகவே பேசிவருகின்றனர். இந்த சதி - உள்நோக்கத்துக்கு ஒரு முகாந்தரமாக "குவைத்தை விடுவிப்பது!" என்கிற ஐ.நா. தீர்மானத்தை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்திக் கொண்டன. நடுநிலை வகித்த ஈரான், ஈராக்கிய ஆதரவு நாடுகளான ஏமன், துனிசியா, ஜோர்டான், மொரிட்டானியா ஆகியவை மட்டுமே இந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போரை எதிர்க்கத் துணிந்தன. மற்றபடி இப்போது போர் நிறுத்தம், சமாதானத்துக்காகப் பெருங்கூச்சல் போடும் ருஷ்யா, சீனா, இந்தியா உட்பட உலகநாடுகள் அனைத்துமே இச்சதிக்கு, ஆக்கிரமிப்புப் போருக்கு உடந்தையாக இருந்தன.

இந்தத் துரோகத் தனத்துக்கு உலகநாடுகள் பலவும் மிகப்பெரும் விலை கொடுக்க வேண்டி வரும். ஏனெனில் இந்தப் போரில் ஏகாதிபத்தியங்கள், குறிப்பாக அமெரிக்க மேல்நிலை வல்லரசு அடையும் வெற்றி, வளைகுடா மீது மட்டுமின்றி உலகம் முழுவதும் அவை தமது பிடியை இறுக்கி அரசியல், பொருளாதார, இராணுவ ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும். உலகின் வேறெந்த நாட்டினது ஆட்சியைக் கவிழ்த்து - எடுபிடிகளை நிறுவவும், அதிநவீன ஆயுதங்களையும், படையையும் ஏவித் தாக்கி அடக்கவும், பொருளாதார - நிதி - வர்த்தக - தொழில்நுட்ப பேரங்களில் சமனற்ற ஒப்பந்தங்களைத் திணிக்கவும் மேலும் துணிவு கொள்ளும்.

இந்தப் போர் அமெரிக்க மேல்நிலை வல்லரசுக்கு இராணுவ ரீதியிலான ஒரு வெற்றியாக இருக்குமே ஒழிய பொருளாதார, அரசியல் வெற்றியாகிவிட முடியாது. அதன் அதிநவீன ஆயுத - இராணுவ வல்லமை அதன் கூட்டாளிகளையே அச்சுறுத்துவனவாக உள்ளன. போர் முடியு முன்பே அதன் பலன்களைப் பங்கு வைப்பதற்கான சண்டை - போட்டி துவங்கி விட்டது. ஓரங்கட்டப்பட்டிருந்த ருஷ்ய சமூக ஏகாதிபத்தியம் அதன் போர் நிறுத்த - சமாதான முயற்சிகளின் போது ஏற்பட்ட அவமானங்களால் ஆத்திரமுற்றிருக்கிறது; நிதி கடன் - முதலீட்டிற்காக மேற்கு நாடுகளின் தயவை எதிர்நோக்கி இருந்தாலும், ருஷ்யாவின் உள்விவகாரங்களில் அவை தலையிடுவது குறித்து அஞ்சுகிறது.

இந்தப் போரில் பெறும் வெற்றியினால் இசுரேலின் அரபு, பாலஸ்தீன ஆக்கிரமிப்பு, சிரியாவின் லெபனான் ஆக்கிரமிப்பு ஆகிய மேற்கு ஆசிய - வளைகுடா விவகாரங்களை அமுக்கி வைத்து இஸ்ரேல் உட்பட தமது அரபு எடுபிடிகளின் ஆட்சிகளைக் காப்பாற்றும் ஏகாதிபத்திய நோக்கம் கூட அவ்வளவு எளிதாக நிறைவேறாது. இந்தப் போரினால் உலக மக்கள், குறிப்பாக அரபு, இசுலாமிய மக்கள் ஏகாதிபத்தியங்கள் மீது அடாத வெறுப்பும் பகையும் கொண்டிருப்பதைக் காட்டினர். ஏகாதிபத்திய எடுபிடிகளான ஷேக், அமீர், இராணுவ சர்வாதிகார அரசுகளுக்கு எதிராக அம்மக்கள் பெரும் எழுச்சிகளில் இறங்குவர். அதுமட்டுமல்ல. ஈராக் - குவைத் ஆகிய யுத்த அரங்குகளில் ஏகாதிபத்தியங்கள் பெறும் வெற்றி உலகம் முழுவதும், புதிய போர் அரங்குகளை நிச்சயம் துவக்கும். அதாவது வெடிக்கவிருக்கும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அவை அஞ்சி நடுநடுங்கும்.

இறுதியாக, உலகின் ஐந்தாவது பெரிய இராணுவத்தையும் அதிநவீன ஆயுதங்களையும் பெற்றிருந்தும் ஈராக் ஏன் இப்போரில் வெல்ல முடியவில்லை என்கிற படிப்பினையையும் உலக மக்கள் பெறவேண்டும். ஈராக் தொடுத்தது ஒரு நீதியான, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் அல்ல; மக்கள் யுத்தமும் அல்ல. ஆக்கிரமிப்பு - பிராந்திய ஆதிக்கப் போரில், நாடு பிடிக்கும் போரில் அது இறங்கியது. இதற்கு மாறாக, நீதியான, தேசவிடுதலைக்கான மக்கள் யுத்தங்கள் மூலமாக அல்பேனியா, கொரியா, வியத்நாம், கம்பூச்சியா போன்ற சிறிய நாடுகள் கூட ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்களில் வெல்ல முடிந்தன. ஆகவே அத்தகைய போர்களுக்காக பாட்டாளி மக்கள் தலைமையில் திரள்வதன் மூலமே உலகின் கொடிய எதிரியாகிய ஏகாதிபத்தியங்களை, குறிப்பாக அமெரிக்க மேல்நிலை வல்லரசை வீழ்த்த முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# ‘பட்ஜெட்’ தள்ளிவைப்பு ஏன்?

## நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக ராஜீவ் -சந்திரசேகர் கும்பல் அடுத்தடுத்து செய்து வரும் அரசியல் மோசடிகளின் தொடர்ச்சியாகச் செய்யும் பொருளாதார மோசடியே இது.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி, கடைசி நாளில் மைய அரசின் ஆண்டு வரவு - செலவுக் கணக்கு அறிக்கை - பட்ஜெட் தாக்கல் செய்து, நிறைவேற்றி ஏப்ரல் முதல் நாளில் அமுலுக்கு வருவது வழக்கம்.

ஆனால் முதல் முறையாக இந்த ஆண்டு (1991-92) அவ்வறிக்கை கொண்டு வரப் படவில்லை. அதற்குப் பதிலாக அடுத்த மூன்று மாதத்துக்கான செலவுக் கணக்கு அறிக்கை மட்டும் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து ஒப்புதல் பெறுவதென இப்போதைய (இதை நாங்கள் எழுதி - நீங்கள் படிப்பது வரை கூட நீடிக்குமா, கவிழ்ந்து விடுமா என்று நிச்சயமற்ற நிலையில் உள்ள) அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கு இந்த அரசு கூறும் காரணம் விரைவில் தமிழ்நாடு சட்டமன்ற இடைத் தேர்தல்கள் வரவிருப்பதுதான். தனது சிறுபான்மை அரசுக்கு ஆதரவான காங்கிரசு எம்.பி.க்கள் தேர்தலைக் கவனிக்கப் போய் விடுவார்கள். முறையான ஆண்டு பட்ஜெட் கொண்டு வந்தால் அதன் வெவ்வேறு பிரிவுகளை நிறைவேற்றுவதற்கான போதிய ஆதரவின்றிப் போய்விடும். இப்படி ஒரு நிதி மசோதா மீதான வாக்கெடுப்பில் தோற்றுப் போனால் அரசே கவிழ்ந்ததாகும். எனவே தள்ளி வைக்கப்படும் பட்ஜெட் ஜூன் மாதம் கொண்டு வரப்படும் என்கிறது சந்திரசேகர் அரசு.

ஆனால் இது உண்மையான காரணமல்ல. மற்றெல்லா விவகாரங்களைப் போலவே இதிலும் இந்தக் கிரிமினல் - மஃபியா கும்பலின் அரசு புளுகுகிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக இந்தக் கும்பல் அடுத்தடுத்து செய்துவரும் அரசியல் மோசடிகளின் தொடர்ச்சியாகச் செய்யும் பொருளாதார மோசடிதான் இது.

1991 - 92 ஆண்டுக்கான வரவு - செலவுக் கணக்கு அறிக்கையைக் கொண்டுவராமல், ஒரு இடைக்கால செலவுக் கணக்கு அறிக்கை கொண்டு வருவதற்கு உண்மையில் இரண்டு காரணங்கள் உள்ளன.

★ இப்போதுள்ள பொருளாதார நெருக்கடி, சர்வதேச நிதியம் (IMF) மற்றும் உலக வங்கியின் நிர்பந்தம் ஆகியவை காரணமாக வரவிருக்கும் ஆண்டு பட்ஜெட் நிச்சயம் நமது மக்களுக்கு எதிரான பெரும் பொருளாதாரத் தாக்குதலாகவே இருக்கும். புதிய வரிகள் விதிப்பு, அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள விலையேற்றம், பல்வேறு மானியங்கள் வெட்டு ஆகியவற்றினால் பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு மக்கள் மீது சுமை ஏற்றப்படும்.

★ தேர்தலைச் சந்திக்காது கட்சி மாறிகளைக் கொண்டே ஆட்சிக்கு வந்துள்ள சந்திரசேகர் கும்பலுக்கு மீண்டும் தேர்தல் ஆட்சி என்பது சாத்தியமே கிடையாது என்பதும் தெரியும்; எனவே மக்கள் மீது பொருளாதாரச் சுமையேற்றி ஏகாதிபத்தியங்கள், தரகு அதிகார முதலாளிகளுக்கு ஊழியஞ் செய்யத் துணிந்து விட்டது. ஆனால் இந்த ஆட்சிக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் ராஜீவ் - ஜெயலலிதா கூட்டணிக்கு இதில் உடனடி சம்மதமில்லை. அதாவது தமிழ்நாட்டில் சீக்கிரம் தேர்தல்கள் வைத்து ஆட்சியைப் பிடிப்பதற்கு இக்கூட்டணி துடித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் மீது பெருஞ் சுமையேற்றும் பட்ஜெட் வந்தால், இலவச - கவர்ச்சித் திட்ட வாக்குறுதிகளை அள்ளிவீசி இக்கூட்டணி ஓட்டுப் பொறுக்க முடியாது; பட்ஜெட்டுக்கு ஆதரவு தராவிட்டால் மத்திய அரசு கவிழ்ந்து விடும் என்பதால் உடனடியாக அனைத்திந்திய நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்திக்க வேண்டும்; அதற்கு இவர்களுக்குத் துணிவில்லை; பட்ஜெட்டை ஆதரித்தால் அதன் காரணமாகவும் தமிழ்நாட்டுத் தேர்தல்களில் பாதிப்பு வரும். இக்காரணங்களினால், சந்திரசேகர் அரசைக் கையைப் பிடித்து முறுக்கி பட்ஜெட்டைத் தள்ளி வைக்கும்படி நிர்பந்தித்து, ராஜீவ் - ஜெயலலிதா கும்பல் அதைச் சாதித்தும் விட்டது.

ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சந்திரசேகர் கும்பலும், தேர்தல் ஆதாயம் கருதி ராஜீவ் கும்பலும் செய்யும் இந்த மோசடியின் பொருளாதார விளைவுகள் கடுமையாகவே இருக்கும் என்று நிபுணர்கள் பலரும் எச்சரிக்கின்றனர். எப்படியானாலும் சுமையேற்றும் பட்ஜெட்டாகத்தான் இருக்கும், தள்ளிப்போடுவதனால் மாறி விடாது; பிறகு ஏன் அப்படிச் செய்ய வேண்டுமெனத் தரகு அதிகார முதலாளிகளின் பத்திரிக்கைகளே அவசரப்படுகின்றன.

**உடனடி அரசியல் ஆதாயம் கருதி பட்ஜெட் தள்ளிப் போடப்படுவதால், பட்ஜெட் பற்றாக்குறையும் அந்நியச் செலாவணி பற்றாக்குறையும் அதிகரிக்கும். ரூபாயின் மதிப்பை மேலும் குறைக்கும்படியான நிர்பந்தம் ஏற்படும்.**

நாடு சிக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியைப் பின்வரும் விவரங்களில் இருந்து புரிந்து கொள்ள முடியும்:

● 7206 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிட்டிருந்த 1990 - 91 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் பற்றாக்குறையோ 14,000 கோடி ரூபாயாகி விட்டது. இப்போதைய கணக்கீட்டின்படி 11,000 கோடி ரூபாய் 1991 - 92 பட்ஜெட்டில் துண்டு - பற்றாக்குறை - விழும். யதார்த்தத்தில் அது 23,000 கோடியை எட்டிவிடும்.

● இந்த ஆண்டு ஜனவரியில் மட்டும் 3,275 கோடி ரூபாய் சர்வதேச நிதியத்திடமிருந்து கடன் வாங்கியுள்ளது. இதற்கு முன்பு, இந்தியாவுக்கான அந்நியச் செலாவணிக் கையிருப்பு 2,500 கோடி ரூபாய், அதாவது 20 நாட்களுக்கானவை. இதுவே ஆறு மாதங்களுக்கு முன்பு 5,787 கோடி ரூபாய் அளவு இருந்தது.

● ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக இருப்பதால் இந்தியாவின் அந்நியச் செலாவணி பற்றாக்குறை 8,000 கோடி ரூபாய். ஏற்றுமதி 35லிருந்து 24 சதவீதமாக வீழ்ந்து விட்டது; இப்படியே போனால் பற்றாக்குறை ஓரிரு மாதங்களில் 10,000 கோடியாகி விடும்.

● இந்தியாவின் அந்நியக் கடன் மட்டும் 1,30,000 கோடி ரூபாய். உள்நாட்டுக்குக் கடன் 1,33,536 கோடி ரூபாய்.

● 1990 - 91 ஆம் ஆண்டுக்கான அரசு வருவாய் இலக்கு 57,000 கோடி ரூபாய்; ஆனால் வசூலித்ததோ 27,000 கோடி ரூபாய்தான்.


● 1989 - 90இல் 9 சதவீதமாயிருந்த பணவீக்கம் 1990 - 91இல் 10 சதவீதமாகி 1991 - 92 இல் 15 சதவீதமாகி விடும். இதனால் விலையேற்றம் கடுமையாகவே இருக்கும்.

இந்த நிலைமைகள் இந்தியப் பொருளாதாரம் ஒருபுறம் பணவீக்கம், மறுபுறம் உற்பத்தித் தேக்கம் ஆகிய தீராத நோயில் சிக்கிக் கொண்டிருப்பதை மேலும் தீவிரமாக்கியுள்ளதையே காட்டுகின்றன. அந்நியக் கடனுக்குத் தவணையும் வட்டியும் செலுத்தவும், ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாவதால் ஏற்படும் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையை ஈடுகட்டவுமே சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எஃப்) மற்றும் உலக வங்கியிடம் இந்திய அரசு கையேந்தி மேலும் மேலும் கடனாளியாகி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்கக் கட்டுப்பாட்டிலுள்ள இவ்விரு நிதியங்களும் இரண்டு வகையினங்களின் கீழ் கடனளிக்கின்றன. ஒன்று, பற்றாக்குறை மற்றும் அவசரத் தேவைகளுக்காக, கூடுதல் வட்டிக்கு, தற்காலிகக் கடன் வழங்குவது; இந்த ஏற்பாட்டின் கீழேயே அந்த நிதியங்கள் விதிக்கும் பல நிபந்தனைகள், நிர்பந்தங்களை ஏற்று ஏற்கனவே இந்திய அரசு கடன் பெற்றுள்ளது.

மற்றொரு வகைக் கடன், கட்டுமான மாறுதல்களுக்கான கடன் வசதி. அதாவது இப்போது இந்தியாவிலுள்ள பொருளாதாரக் கட்டமைப்பு முழுவதையும் அமெரிக்கா மற்றும் மேற்கு ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்கும் திட்டமிடுதலுக்கும் ஏற்றவாறு மாற்றி அமைப்பதற்கான நிதி - கடன் வசதி.

இப்போது இங்குள்ள பொருளாதாரக் கட்டமைப்பு நேரு காலத்தில் உருவாக்கப்பட்ட போலி சோசலிச பாணியிலானது. ருஷ்யா, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்கள் இரண்டுக்கும் சேவை செய்யும் அரசுத் துறை, தனியார் துறை மற்றும் கூட்டுத் துறைத் தொழில்களைக் கொண்ட கூட்டுப் பொருளாதாரம். இதன் கீழேயே பல துறைகளில் கூட்டுறவு அமைப்புகளும் உள்ளன.

இவற்றோடு விவசாயம், கைத்தொழில்கள், மக்கள் நலன்களுக்காக பலவகை மானியங்களும் தரப்படுகின்றன. அதாவது உரம், கதர் - கைத்தறி, மின்சாரம், பஸ் - ரயில் போக்குவரத்து, உணவு மற்றும் பிற அடிப்படைத் தேவைகளுக்கு அரசு கணிசமான அளவு நிதியளிக்கிறது. இல்லையென்றால் இவை இப்போதுள்ளதை விடப் பல மடங்கு கூடுதலான விலை கொடுத்துத்தான் மக்கள் பெற முடியும். இவற்றின் அடக்க விலையில் 40 முதல் 50 சதவிகிதம் அரசு நட்ட ஈடாக - லாப ஈடாகக் கொடுப்பதால் இவற்றை அடக்க விலையை விடக் குறைவாக மக்கள் பெறுகிறார்கள்.

இப்போது இந்திய அரசு கடன் கேட்டுப் போகும் ஐ.எம்.எஃப்.பும் உலக வங்கியும் இந்த இந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வரும்படி நிர்பந்திக்கின்றன. அவற்றில் முக்கியமானவை இரண்டு:

— ரயில்வே போன்ற மிகப் பெருமளவு முதலீடும், லாபவிகிதம் குறைவாகவும், தொழிலாளர் அதிகமாகவும் உள்ள ஒரு சில துறைகள் மட்டுமே அரசுத் துறையில் இருக்க வேண்டும். ஆனால் துணி நெய்வது, பால் - முட்டை - கோழிப் பண்ணைகள் முதல் ஓட்டல்கள் நடத்துவது வரை சகல துறைகளிலும் அரசு ஏன் தொழில் நடத்த வேண்டும். எனவே மின்சாரம் முதற்கொண்டு எல்லாத் துறைகளிலும் தனியார் கட்டுப்பாட்டிற்கு வரவேண்டும். பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த மேலைநாட்டுத் தொழில் கழகங்களுடன் சுதந்திரமான தொழிற்கூட்டு வைத்துக் கொள்ளும் வகையில் எல்லாத் தடைகளும் நீக்கப்பட வேண்டும்.

— வணிக - வர்த்தகத்தில் அரசு தலையிட்டு வழங்கீட்டையும் விற்பனை விலையையும் கட்டுப்படுத்துவது கூடாது. இவை சுதந்திரமான சந்தை - போட்டிக்குத் திறந்துவிட வேண்டும். மானியங்களை கொடுத்து, லாப - நட்ட ஈடு செலுத்தி விலையைக் குறைக்கவும் கூடாது. இலவச - கவர்ச்சித் திட்டங்களை எல்லாம் நிறுத்திவிட வேண்டும். பற்றாக்குறை பட்ஜெட் கூடாது; மானியங்களை வெட்டியும், விவசாயத்துக்கு வரி விதித்தும் இதைச் செய்ய வேண்டும். பால், மின்சார விலை, பஸ் - ரயில் கட்டணம் போன்றவற்றை மேலும் உயர்த்த வேண்டும்.

ஐ.எம்.எஃப். போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் 1981இல் இந்திரா - வெங்கட்ராமன் இரகசிய ஒப்பந்தம் போட்டு கடன் வாங்கிய போதே முதலாவது நிபந்தனையை அமுலாக்கத் துவங்கி விட்டது. தேர்தல் ஆதாயம் கருதி இதுவரை இரண்டாவது நிபந்தனையை அமுலாக்கவில்லை; மேலும் இதனால் பல முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் கூட ஆதாயம் அடைந்து வந்தனர். இதே கொள்கையைத்தான் இந்திராவின் வாரிசு, ஜனதா தள ஆட்சியினரும் பின்பற்றினர்.

இந்தியாவின் இன்றைய தீராத, தீவிரமாகும் பொருளாதார நெருக்கடியில் இப்போது ஆட்சிக்கு வரும் எந்த ஓட்டுக் கட்சியும் மேற்படி நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அமுலாக்குவதற்குத் தயாராய் உள்ளது. இது குறித்துப் பெருங்கூச்சல் போடும் போலிக் கம்யூனிஸ்டுகள், பாரதீய ஜனதா, ஜனதா தளம் - தேசிய முன்னணியிடம் கூட மாற்றுப் பொருளாதாரத் திட்டம் எதுவுமில்லை. மண்டல், அயோத்தி என்று பல்வேறு விவகாரங்களிலும் மாறுபடும் இந்த ஓட்டுக் கட்சிகளுக்குள் மேற்படிப் பொருளாதாரக் கொள்கையில் அடிப்படை மாற்றம் கிடையாது.

ஆனால் இந்தப் பொருளாதாரக் கொள்கையினால் ஏகாதிபத்தியங்களுடன் இந்தியப் பொருளாதாரம் நேரடியாகப் பிணைக்கப்படுவது மட்டுமல்ல; கூலி விவசாயிகள், தொழிலாளர்கள் மீது பொருளாதாரச் சுமை ஏற்றப்படுவது மட்டுமல்ல; ஏழை நடுத்தர விவசாயிகளும், நகர்ப்புற நடுத்தர மக்களும் கூட பெருமளவு பாதிக்கப்படுவார்கள். ஆனால் ஓட்டுப் பொறுக்கிகளுக்கு இதைப் பற்றியெல்லாம் அக்கறை ஏது?

உடனடி அரசியல் ஆதாயம் கருதிப் பட்ஜெட் தள்ளிப் போடப்படுவதால் பட்ஜெட் பற்றாக்குறையும், அந்நியச் செலாவணி பற்றாக்குறையும் கூட அதிகமாகும்; பெரு முதலாளிகள் இறக்குமதித் தேவைகளை வாங்கிக் குவித்து மேலும் நெருக்கடியை அதிகமாக்குவார்கள்; இறுதியாக ரூபாயின் மதிப்பைக் குறைக்கும்படியான நிர்பந்தம் ஏற்படும் என்றெல்லாம் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இருந்தும் ராஜீவ் - சந்திரசேகர் கும்பல் நாட்டு மக்களுக்கு எதிராக பொருளாதார மோசடி செய்வதைத் தொடர்கிறது. மாற்றுத் திட்டமின்றி பிற ஓட்டுக் கட்சிகளும் வெறும் கூச்சல் போடுகின்றன.

நேரு - இந்திரா பரம்பரையினால் உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பு தீராத நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது உண்மைதான்; ஆனால் ஏகாதிபத்தியங்களுக்கு முற்றாக அடகு வைப்பது என்ற அடிப்படையில் அதை மாற்றி அமைப்பது தீர்வாகாது. அப்படிச் செய்த மெக்சிகோ, ஜெயர் போன்ற தென் அமெரிக்க, ஆஃப்ரிக்க நாடுகள் மீளமுடியாத கடனிலும், பஞ்சத்திலும் சிக்கிக் கொண்டன. எனவே ''உழுபவனுக்கே நிலம், உழைப்பவர்க்கே அதிகாரம்'' என்கிற அடிப்படையிலான புதிய ஜனநாயக அரசியல் - பொருளாதாரக் கட்டமைப்பே இந்த நெருக்கடியிலிருந்து நமது நாடும் மக்களும் மீள்வதற்கான மாற்று வழியாகும்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## நாடாளுமன்ற ஜனநாயகம்:

# பிரமை தேவையில்லை

**ராஜீவ்கும்பல் ஒரு நிழல் மந்திரிசபை அமைத்துக் கொண்டு, பின்னால் இருந்து இந்த அரசை இயக்குகிறது. உளவுத்துறையின் நடவடிக்கைகள், “பட்ஜெட்” தயாரிப்பு போன்ற இரகசியங்களில் அரசுப் பொறுப்பில் இல்லாத இந்தக் கும்பல் தலையிடுகிறது.**

“அங்கும் இருப்பான், இங்கும் இருப்பான், ஆக்கின சோற்றில் பங்கும் கேட்பான்” என்கிற வகையிலானதாக ராஜீவ் கும்பலின் அரசியல் நடத்தை இருக்கிறது. நாடாளுமன்றத்தில் பெரிய கட்சியாக காங்கிரஸ் இருந்தும், சிறுபான்மைக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, இந்த அரசின் கையை முறுக்கிக் காரியங்களைச் சாதித்து வருகிறது.

அதேசமயம், ராஜீவ் கும்பலின் வாயில் எச்சில் ஒழுகுகிறது; தேர்தலைச் சந்திக்கவும் துணிவு கிடையாது. ஆகவே அரண்மனைச் சதிகார அரசியல் நடத்தி, கட்சிமாறிகளை வைத்து மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு நாயாய் அலைகிறது.

இந்த அரசு மேற்கொள்ளும் மக்கள் ஆதரவு - அனுதாபத்தைப் பெறக்கூடிய நடவடிக்கைகள் எல்லாம் தனது முயற்சி, நிர்பந்தங்களால் வந்தவை என்று பீற்றிக் கொள்கிறது. ஆனால், மக்கள் வெறுப்பைப் பெறக்கூடிய நடவடிக்கைகளுக்கான பொறுப்பைத் தட்டிக் கழித்து, அவற்றுக்கு எதிராகப் போராடுவதாக நாடகமாடுகிறது.

பதவியேற்றவுடன் பிரதமர் ஆற்றிய வானொலி - வானொளி உரையே கூட ராஜீவின் ஒப்புதலுக்கு வெட்கமின்றி அனுப்பப்பட்டது. அமைச்சரவை ராஜீவின் 'யோசனை'ப்படிதான் அமைந்தது. போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழல் வழக்கும் விசாரணையும் ராஜீவின் வக்கீல் ஜி.ராமசாமியின் வழிகாட்டுதல்படியே நடக்கின்றன.

ராஜீவின் நிர்பந்தம் காரணமாக, அசாம், தமிழ்நாட்டு ஆட்சிகள் கலைக்கப்பட்டன. கவர்னர்கள், அதிகாரிகள் அவரது முடிவுப்படியே நியமிக்கப் படுகின்றனர். அரசுக் கோப்புகளைப் பார்வையிட்டு முடிவுகள் - சிபாரிசுகள் - உத்திரவுகளை ராஜீவ் ஆட்களே போடுகின்றனர்.

“ரா”, “ஐ.பி”, “சி.பி.ஐ” முதலிய மத்திய உளவு அமைப்புகளின் அதிகாரிகளை, ராஜீவின் பழைய போலீசு மந்திரி பா.சிதம்பரம் வரவழைத்து ஆணையிடுகிறார். பழைய நிதிமந்திரி பிரணவ முகர்ஜி நிதி அமைச்சகக் கோப்புகளைப் பார்வையிடுவதோடு இப்போதைய நிதி மந்திரி யஷ்வந்த் சின்காவுடன் சேர்ந்து 1991 - 92-ம் ஆண்டுக்கான 'பட்ஜெட்' தயாரிக்கிறார்.

உளவுத் துறையின் நடவடிக்கைகள், “பட்ஜெட்” தயாரிப்பு, போன்ற இரகசியங்களில் அரசுப் பொறுப்பில் இல்லாத இந்தக் கும்பல் தலையிடுகிறது. அதே சமயம், பஞ்சாப் தீவிரவாதிகளுடன் பேச்சு, விலைவாசி ஏற்றம், புதிய வரிவிதிப்பு, அமெரிக்க ராணுவ விமானங்களுக்கு “பெட்ரோல்” போடுவது, எம்.பி. பதவியிழந்த 5 மந்திரிகள் நீடிப்பது போன்ற விவகாரங்களில் இந்த அரசை எதிர்ப்பதாக ராஜீவ் கும்பல் கூச்சல் போடுகிறது.

மறுபடியும் தேர்தல்கள் மூலம் ராஜீவ் கும்பல் ஆட்சியைப் பிடிக்கும் நம்பிக்கை சரிந்து வருகிறது. மண்டல், அயோத்தி விவகாரங்களில் ஆதரவைத் திரட்டும் திராணி அதற்கில்லை. எனவே, ஜனதாதளக் கட்சிகளில் இருந்து பலரை விலைக்கு வாங்கி, இப்போதைய நாடாளுமன்றத்திலேயே பெரும்பான்மை பலம்பெற்று ஆட்சி அமைப்பதற்கு அலைகிறது. ஆனால், அதற்கான வாய்ப்பும் மங்கி வருவதால், சந்திரசேகர் அரசுக்கு மேலும் பல நிர்பந்தங்களைத் தந்து அன்றாடம் மிரட்டுகிறது.

ராஜீவ் - சந்திரசேகர் கும்பல்களுக்கிடையிலான இந்த ஊடலும் - கூடலுமான உறவு காரணமாக அரசியலில் ஒரு நிலைத்த தன்மை இல்லாமல் போய்விட்டது. நாட்டின் நலன்கள் பாதிக்கப் படுகின்றன என முதலாளித்துவப் பத்திரிக்கைகள், அரசியல் விமர்சகர்கள் அனைவருமே கூப்பாடு போடுகின்றனர். ஆனால், இன்னொரு தேர்தலாவது நிலைத்த அரசியல் தன்மையைக் கொண்டு வரும் என்கிற நம்பிக்கை எவருக்குமே கிடையாது.


நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் எவையெல்லாம் தனிச்சிறப்பு, மாண்பு வாய்ந்தவை, புனிதமானவை என்று இவர்கள் பசப்பினார்களோ அவையெல்லாம் நிர்வாணமாகி நிற்கின்றன. அந்த அமைப்பு ஒவ்வொரு அங்கமாக வெட்டிச் சிதைக்கப் படுகின்றது.

■ கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட புனிதங்கள் - மாண்புகள் என்று கூறப்பட்ட 'குடியரசு'த் தலைவர், ஆளுநர்கள், சட்டப்பேரவை - நாடாளுமன்ற அவைத் தலைவர்கள் கட்சி அரசியலில் கழுத்தளவு மூழ்கிப் போயுள்ளனர். ஜனாதிபதி, கவர்னர் மாளிகைகள் அரசியல் சதிகள் - பேரங்கள் நடக்குமிடங்களாக உள்ளன. சபாநாயகர்கள் அரசியல் பழிவாங்கலுக்கும், கட்சிமாறிகளைக் காப்பதற்கும் பயன்படுகிறார்கள்.

■ முதலாளிகள், அரசியல்வாதிகளுக்கு ஊழியஞ் செய்பவர்களும் ஊழல் குற்றஞ் சாட்டப்பட்டவர்களும் நீதிபதிகளாக உச்ச நீதி - உயர்நீதி மன்றங்களில் உள்ளனர். அவர்கள் பகிரங்கமாகவே சட்ட விரோத தீர்ப்புகள் - விசாரணைகளில் ஈடுபடுகின்றனர்.

■ பல்வேறு அமைச்சரவைச் செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள், பொதுத்துறை ஆலை - தொழில் இயக்குநர்கள், தேர்தல் கமிஷனர்கள் முதல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வரை ஆளும் கட்சிகளின் சார்புடையவர்களாக நியமிக்கப் படுகின்றனர். அரசியல்வாதிகளைப் போல அவர்கள் அறிக்கைகள் விடுகின்றனர். வெளிநாடுக




படிப்பகம்

www.padippakam.com

ளுக்கான தூதர்கள், முப்படைத் தளபதிகள் கூட இப்படித்தான் உள்ளனர்.

■ ஆட்சிக் கவிழ்ப்புகள், அரசியல் சதிகள் - பேரங்கள் ஆகியவற்றுக்கு மத்திய உளவுத் துறைகளான ''ரா''வும், ''ஐ.பி''யும், அரசியல் பழிவாங்குதலுக்கு ''சி.பி.ஐ.''யும் பயன்படுத்தப் படுகின்றன. டி.ஜி.பி., கமிஷனர் முதலிய உயர் போலீசு அதிகாரிகளும் இந்நோக்கத்துடனே நியமிக்கப் படுகிறார்கள்.

■ பஞ்சாப், காஷ்மீர், அசாம் ஆகிய பெரும் மாநிலங்களிலும் வட கிழக்கிலுள்ள ஆறு சிறு மாநிலங்களிலும் இராணுவ, துணை இராணுவ ''ஆட்சி''கள் நடக்கின்றன. பஞ்சாப் காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உள்நாட்டுப் போர் நிலைமை; உ.பி. பீகாரில், பல நகரங்களில் ஆறு மாதங்களுக்கு மேலாக ஊரடங்கு - துணை இராணுவ ஆட்சி. அங்கு அப்படைகளே வகுப்புவாத நிறுவனங்களாகி மதவெறிக் கொலைகள் நடத்துகின்றன.

■ ஜனநாயகத்தின் தனிச்சிறப்பெனக் கூறப்படும் தேர்தல் வாக்களிப்பு உரிமை மறுக்கப்பட்டு 4 மாநிலங்களில் ஆளுநர் ஆட்சிதான் நடக்கிறது. வேறு சிறு மாநிலங்களில் கட்சி மாறுவதும், ஆட்சிக் கவிழ்ப்பும் மாதாந்திர நிகழ்ச்சிகளாகி விட்டன.

■ பீகார், உ.பி. ராஜஸ்தான், குஜராத், அரியானா, மகாராஷ்டிரா ஆகிய ஆறு பெரும் மாநிலங்களில் சிறுபான்மைக் கட்சி அல்லது கட்சி மாறிகளின் ஆட்சிதான் நடக்கிறது. மத்தியில் பத்தில் ஒரு பங்கே எண்ணிக்கையுள்ள கட்சியின் ஆட்சி. இந்த மாநிலங்கள் - மத்திய அரசாங்கங்களை வெளியிலிருந்து ஆதரிக்கும் வேறு கட்சிகளே ஆட்டிப் படைக்கின்றன.

— இவை அனைத்தும் காட்டுவதென்ன? நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பே நிலைகுலைந்து விட்டது. தோற்றுப் போய்விட்டது. இதிலே எஞ்சி இருப்பது அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதித்துறை ஆகிய நிர்வாக உறுப்புகள்தாம்.

அதுவும் நிலைத்த தன்மையுடைய ஆளும் அரசியல் கட்சி, அரசாங்க அமைப்பின் கீழ் இல்லை. இந்த நிர்வாக அமைப்புகள் தமக்கு மேலே பதில் சொல்ல வேண்டிய பொறுப்புகள் எதுவும் இல்லாத அதே சமயம் இரட்டிப்பு அதிகாரத்துடன் நிர்வாக அதிகாரங்களைப் பெறுகின்றன.

இவ்வாறு அதிகார வர்க்க நிர்வாக இயந்திரத்தின் பிடி ஒரு பக்கம் இறுகி வருகிறது. பெயரளவுக்கான ஜனநாயக தன்மையுடைய நிறுவனங்கள் அரசியல் அராஜகம் காரணமாக மறுபக்கம் தகர்க்கப் படுகின்றன. இந்நிலையானது ஒரு அதிகார வர்க்க இராணுவ சர்வாதிகாரம் அல்லது பாசிச சர்வாதிகாரம் அதிகாரத்துக்கு வருவதற்கான வளமான காரணத்தை - தயாரிப்பை ஏற்படுத்திவிடும். இந்நிலையைச் சீர்திருத்துவதோ, அரசியல் அராஜகத்தைத் தடுப்பதோ முடியாது. இப்படிப்பட்ட அரசியல் நெருக்கடியை உள்ளடக்கியதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதை உலகின் பல நாட்டு வரலாறும் கூறுகின்றன. எனவே, அதைக் காக்கும் மாயை எதுவும் நமக்கு வேண்டாம்.

● மணி

# சூதாட்டக்களம்

**தேர்தல் நெருங்கிவிட்டது. 'அரசியல்' களம் சூடு பறக்கிறது. ஜெயலலிதா தேர்தல் நிதி வசூலில் விண்ணில் பறக்கிறார்! கருணாநிதி ஆண் ஜெயலலிதாவாக மாறி விட்டார்! இருவரும் வாக்காளர்களை மயக்குகிறார்கள். போட்டி உக்கிரமடைகிறது. தமிழனின் தன்மானம் மீண்டும் ஏலம் விடப்படுகிறது!**

''அடியே அனார்கலி! உனக்குப் பிறகு இந்த நாட்டில் உயிரோடு புதைக்கப் பட்டது ஜனநாயகம்தானடி?'' - என்று தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றி முகாரி பாடிய கருணாநிதி தேர்தல் பறையொலி கேட்டவுடன் விழுந்தடித்து கொண்டு அதையே போர்ப்பரணியாக பாட ஆரம்பித்து விட்டார்.

''உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் அரசை உங்களுக்காக உழைக்கந்த ஒரு சதிக் கூட்டத்தால் சாய்க்கப்படுவதா? அவமதிக்கப்படுவதா? வெகுண்டெழ வேண்டாமா? வீணர்களை வீழ்த்திட வேண்டாமா? சூது மதியாளர்களை தூள் தூளாக்கும் வரை தூக்கமில்லை தமிழனுக்கு! சூளுரைப்போம் வா! தமிழா பகை முடிப்போம் வா!'' என்று அடுத்த தேர்தல் சூதாட்டக் களத்தில் மடியை விரித்து வைத்து விட்டார். முதல் வேலையாக வரும் சட்டமன்ற தேர்தலுக்கு விண்ணப்ப கட்டணம் ரூ.1000/- என்று உடன் பிறப்புக்களிடம் வசூலில் இறங்கி விட்டார்.

''சந்திரசேகர் பிரதமராக இருக்கும் வரை தேர்தலில் நிற்பது பற்றியே யோசிக்க வேண்டுமென்று'' கூறியிருந்தீர்களே என்று நிருபர்கள் கருணாநிதியிடம் கேட்டதற்கு, ''மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆட்சியை ஒரு கையெழுத்தால் எந்தவிதமான நியாயமான காரணமுமின்றி கலைத்து விடுகிற நிலை இருப்பதைச் சுட்டிக்காட்டத்தான் அவ்வாறு குறிப்பிட்டேன். தேர்தலை அறவே புறக்கணிக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட கருத்து அல்ல அது'' என்று பதவி மோகத்தில் வழிந்தார்.




ஜெயலலிதாவின் முந்தானை நிழலில் ஒண்டிக் கொண்டிருக்கும் காங்கிரசு கட்சியில் ஜெயலலிதா கொடுத்த 66 சீட்டை பிரித்துக் கொள்வதில் ஏகப்பட்ட கலாட்டா! ஒரு காந்தீயவாதி 'சீட்' கிடைக்காததால் சென்னை - சாஸ்திரி பவனிலிருந்த வாழப்பாடி ராமமூர்த்தி உதவியாளர் கண்ணனை கத்தியால் குத்தி சாய்த்தார். சென்னை திருவள்ளூரில் இரண்டு காந்தீயவாதிகள் பொதுக்கூட்டத்திலேயே 'சீட்டு'க்காக கட்டி புரண்டனர். கூட்டத்தினர் சிதறியோடினர். காங்கிரசாரிடம் தமிழக ஆட்சி கிடைத்தால் மக்கள் எச்சரிக்கையுடன் நடமாட வேண்டும். இல்லையானால் உடம்பில் துண்டு துணியைக் கூட விட மாட்டார்கள்!

தேர்தல் களத்தில் வன்னியர் சங்கத் தலைவர் ராமதாஸ் தலைமையில் 3வது அணி குதித்துள்ளது. 'நாங்கள் வெற்றியடைந்தால் தாழ்த்தப்பட்டவர் தான் முதல்வர்' என்கின்றனர். ஆனால் வேட்பாளர் தேர்வில் இட ஒதுக்கீடு சதவிகிதத்தை பின்பற்றுவார்களா என்று வாய் திறக்கவில்லை.

இங்கும் அங்கும் ஓடி வாலறுந்த கும்பல் ஒன்று சாத்தூர் ராமச்சந்திரன் - நடிகர் ராமராஜன் தலைமையில் ஒரு அணியும் திருநாவுக்கரசு, பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில் ஒரு அணியும் ஜெயலலிதாவின் கடைக்கண் பார்வைக்கு சென்னையில் தவம் கிடக்கிறது.

அரசியல் சீக்கு ஜெயலலிதா அரண்மனை கவிழ்ப்பு நடத்திய மிதப்பில் தேர்தலுக்கு கூட காத்திராமல் தானே அடுத்த முதல்வர் என்று வலம் வருகிறார். முதலாளிகளுக்கு தன் ஆட்சியில் செய்யப்போகும் சலுகைகளுக்காக நன்கொடைகளை அவர்களிடமிருந்து கறக்க ஆரம்பித்து விட்டார். தன் சார்பில் பண முதலைகளிடம் தரகு வேலை பார்ப்பதற்கு ராமகிருஷ்ணன், சுவாமிநாதன் என்ற இரண்டு பார்ப்பனர்களை ஆலோசகர்களாக நியமித்துக் கொண்டார்.

சுமார் 60 ஆண்டுகால வரலாறு கொண்ட திராவிடக் கட்சிகளின் அரசியல் பிழைப்புவாதத்தை அப்படியே தூக்கி சாப்பிடுகிறார். கருணாநிதி போன்ற கவர்ச்சி, பொறுக்கி அரசியலின் பிதாமகன்களே மூச்சடைத்து போகுமளவு தேர்தல் அரசியலில் விண்ணில் பறக்கிறார். ஒரு தொகுதிக்கு 20



படிப்பகம்

www.padippakam.com



பேருக்கு குறையாமல் நபர் ஒன்றுக்கு ரூ.2,000 விண்ணப்ப கட்டணம் (சென்னை - ஆலந்தூர் தொகுதியில் மட்டும் 136 பேர்) என்று ஒரு கோடி ரூபாயை தேர்தல் நுழை வாயிலேயே திரட்டிக் கொண்டார்.

வேட்பாளர்கள் பரிசீலனை என்று சந்தையில் மாடுகளை பல் பிடித்து பார்ப்பது போல் 'பசை' உள்ள நபர்களை பொறுக்கினார். தலா ரூபாய் 5 லட்சம் வாங்கி தேர்தலின் போது ரூ.6 லட்சமாக தருவதாக சொன்னாராம்! காங்கிரசுக் கட்சிக்கு ஒதுக்கிய 66 தொகுதிகளையும் சேர்த்து 234 இடங்களிலும் அ.தி.மு.க. காரர்களிடம் வசூலித்து விட்டார்!

தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் மக்களுக்கு உழைப்பார்களா? கட்சிக்காவது விசுவாசமாக இருப்பார்களா? எந்த வரையறையும் கிடையாது. பணத்தை கழுத்தில் கட்டிக் கொண்டு வந்தால் நாய், பன்றிக்குக் கூட 'சீட்' உண்டு! இப்படித்தான், அ.தி.மு.க. உறுப்பினராகக் கூட இல்லாத வி.ஜி.பி. சார்லஸ் என்ற சென்னை ''தங்க கடற்கரை'' உல்லாச உலக முதலாளி மகனுக்கும், திருநெல்வேலி - ராம்சேட் சொக்கலால் பீடி சுல்தான் மகன் மோகன்தாஸுக்கும் முன்பு சீட் கொடுத்தார், 'புரட்சி' செல்வி!

பணத்தை வண்டியிலேற்றி கொண்டு வந்தால்கூட 'தலைவி'யைப் பார்ப்பதற்கு காத்திருக்க வேண்டும். மாவட்டம்,மேல்மட்டம்,ஆட்சி மன்றக்குழு என்று வரிசையாக பணத்தை இறைக்க வேண்டும். அதன்பிறகு பூனை படை, யானை படை மனது வைத்தால் வேட்பாளர் தேர்வு சொர்க்கவாசல் திறக்கும். இவ்வாறு சென்ற 'மக்கள் சேவகர்கள்' 'தலைவி'யின் முன் நிற்பதற்கு கூட நடுங்கினார்களாம்! 'நா'க்குளறி உளறி தங்களைப் பற்றிய விபரங்களை சொன்னார்களாம்! தலைமறைவு கொள்ளைக் கூட்டத் தலைவன் கூட தனது அடியாட்களை கொஞ்சமாவது மதிப்பான்! ஆனால் சொரணை உதிர்த்து விட்ட கும்பல் ஜெயலலிதாவை சுற்றிவந்து நக்கிப் பிழைக்கிறது.

இப்போதே, கவர்னர் உட்பட அதிகார வர்க்கம் ஜெயலலிதாவின் காலடியில் சுருண்டு கிடக்கிறது. தி.மு.க. ஆட்சி விசுவாசிகள் என்று சந்தேகிக்கும் கலெக்டர்கள், உயர் போலீசு அதிகாரிகளை பந்தாடுகிறார். அப்பதவிகளில் கவர்னர் மூலம் தம் விசுவாசிகளை நியமிக்கிறார். திருச்சி, தஞ்சை, கன்னியாகுமரி கலெக்டர்கள், சென்னை உயர் போலீசு அதிகாரிகள் என்று இது முடிவேயில்லாமல் தொடர்கிறது.

கவர்ச்சி அரசியல் கதாநாயகியின் புகழ் கரைபுரண்டு அடிப்பதை கண்டு தி.மு.க. நடுங்கிக் கொண்டிருக்கிறது. தோல்வி ஜன்னியில் அரட்டுகிறது. ''தோள் மிகுந்துள்ள - துடை வளைத்து கூத்தாட... (எழுத முடியாத ஆபாசம்) ... கண்டோர் நரம்புகளில் கலவரமூட்டி - அதற்குக் கூலி வாங்கி வந்த ஒரு 'மாஜி' நடிகையா, பெருந்தலைவர் காமராஜ், மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா அமர்ந்த இடத்தில் அமர்வது? காங்கிரசு கன்னியர்கள் (!) சிந்திக்க வேண்டாமா?'' என்று ஓலமிட்டது. (முர. பிப்.12). ''சங்கத் தமிழா! சதைப் பொதியா? சாயாக் கொள்ளையா? ஓயா மடமா? தன்மான சிகரமா? காபரே கூத்தா?'' என்று ஏலம் போடுகிறது.

இதன்மூலம் தான் மிகப்பெரும் அரசியல் பாரம்பரியத்தில் ஜனித்தக் கட்சி போல் பகட்டியது. மேலும் தன்னுடைய ஆட்சியைக் கவிழ்த்த பிறகு தமிழ்நாட்டில் ஜனநாயக விரோத உளவுத்துறை அதிகார வர்க்கத்தின் ஆட்சி நடப்பதாக மக்களை திடீர் அக்கறையுடன் எச்சரித்தது.

''அட நாராயணா! நடப்பது கு. தலைவர் ஆட்சியா? 'ஐ.பி' ஆட்சியா'' என்று மத்திய உள்துறை துணை மந்திரி சுபோத் காந்த் சகாயுடன் தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு, நிர்வாகத்தைப் பற்றி டில்லி மற்றும் மாநிலத்தின் உளவு துறையின் உயர் அதிகாரிகள் சென்னையில் பேசியதை படத்துடன் வெளியிட்டது." அட, வெங்கட்ராமா!? நீ குடியரசு தலைவரா அல்லது தலைமை குமாஸ்தாவா?'' என்று பொறுமியது. இதே கும்பலைத்தான் தான் ஆட்சியிலிருந்த போது வரிசையில் நின்று மாலையிட்டு வரவேற்றதை, புகழாரம் சூட்டியதை தமிழர்கள் மறந்து போய் இருப்பார்கள் என்று கணக்கு போட்டது.

சந்திரசேகர் கும்பல் ஏலத்தில் எடுத்த ஆட்சியைப் பயன்படுத்தி வரிசையாக பல, தேச விரோத மக்கள் விரோத காரியங்களில் ஈடுபட்டது. தன்னுடைய ஆட்சியை காத்துக் கொள்ள அப்போது முடங்கி கிடந்த கருணாநிதி தன் பதவி பிடுங்கப்பட்டவுடன் வழக்கம்போல் மத்திய அரசை கரித்துக் கொட்டினார்.

'மத்திய அரசின் பாதங்களை நானே தலையில் தாங்கியிருப்பேன். என்னை தேவையில்லாமல் உதைத்து தள்ளிவிட்டார்களே! நான் விடுதலைப் புலிகளை ஆதரித்ததாக சொல்வது அடுக்குமா' என்று புலம்பினார்.

''கடந்த ஓராண்டு காலத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட போராளிகள் தேசப் பாதுகாப்பு சட்டப்படி (என்.எஸ்.ஏ) கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனரே அவர்களில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்டோர் விடுதலைப் புலிகள் என்றும் மற்றவர்கள் வேறு போராளிக் குழுவினர் என்றும் நாட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது எப்போது? கழக ஆட்சி இருந்தபோது தானே! (முர. மு.க. கடிதம் 13.2.'91)'' என்று ஈழ போராளிகளுக்கு செய்த துரோகங்களை வெட்கமில்லாமல் பட்டியலிட்டார்.

மறுபுறம் உயர்மட்ட பார்ப்பன அதிகார வர்க்கத்தினர் தம்மை அவர்களுடைய நலன்களுக்கு எதிரானவராக சந்தேகிப்பதை வீண் பயம் என்று தெளிவு படுத்தினார். அவர்கள் சந்தேகம் போக்க தன்னைச் சுற்றி இந்து பத்திரிக்கை இணை ஆசிரியர் ராம், முன்னாள் நிதித்துறைச் செயலர் குகன், நரம்பியல் நிபுணர் ராமமூர்த்தி போன்ற உயர் பார்ப்பனர்களை தன் ரிஷிகளாக்கி கௌரவிக்கிறார்.

ஆக, கவர்ச்சி, பொறுக்கி அரசியல் புயல் ஜெயலலிதாவை வீழ்த்த கருணாநிதி முழுக்க ஆண் ஜெயலலிதாவாக ஜொலிக்கிறார்.

● குணசேகரன்

வேட்பாளர்கள் பரிசீலனை என்று சந்தையில் மாடுகளை பல் பிடித்து பார்ப்பது போல் 'பசை' உள்ள நபர்களை பொறுக்கினார். தலா ரூபாய் 5 லட்சம் வாங்கி தேர்தலின் போது ரூ.6 லட்சமாக தருவதாக சொன்னாராம்! காங்கிரசுக் கட்சிக்கு ஒதுக்கிய 66 தொகுதிகளையும் சேர்த்து 234 இடங்களிலும் அ.தி.மு.க. காரர்களிடம் வசூலித்து விட்டார் ஜெயலலிதா!



படிப்பகம்

www.padippakam.com




● வளைகுடாப் போரில் அமெரிக்காவின் நோக்கம் ஆதிக்க வெறியென்றும், ஈராக்கின் நோக்கம் ஆக்கிரமிப்பு என்றும் சரியாகவே மதிப்பிட்டுள்ளீர்கள். ஆனால், இதன் காரணமாக இருவரையும் எதிர்க்க வேண்டும் எனச் சொல்வது பொதுவாக தவறானதும், குறிப்பாக உமது சர்வதேசப் பொதுவழிக்கு எதிரானதும் அல்லவா? ஏனெனில், இப்போரில் ஈடுபட்டிருக்கும் ஒரு தரப்பான அமெரிக்கா (உலக மக்களின் பொது எதிரிமட்டுமல்ல, முதன்மையான எதிரியும் கூட. மேலும், அது இப்போரில்) இந்தப் பகுதியில் தன்னுடைய நவகாலனிய ஆதிக்கத்தைத் தக்கவைப்பதற்காகவே ஈடுபட்டிருக்கிறது. மற்றொரு தரப்பான ஈராக்கோ இதுவரை ஏகாதிபத்தியங்களின் சார்பு நாடு. இதன் காரணமாக போண்டியான தன் பொருளாதாரத்தை நிலைநிறுத்தவே குவைத்தை ஆக்கிரமித்தது. அதைத் தக்கவைக்க இதுவரைதான் சார்ந்திருந்த ஏகாதிபத்திய முகாமை எதிர்க்கின்றது. எனவே, இது புறநிலையில் வளைகுடாப் பகுதியில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் அமெரிக்காவின் நவகாலனிய முயற்சியை எதிர்த்ததாகவும் இருக்கிறது. ஆனால், தாங்களோ அமெரிக்காவின் வளைகுடாப் பகுதியின் மீதான மேலாதிக்க முயற்சியை மட்டுமல்ல. குறிப்பாக, ஈராக்கைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியையும் பார்க்க மறுப்பதோடு குவைத்தைச் சுரண்டவும் தன்னுடைய எடுபிடிகளின் ஆட்சியை ஏற்படுத்தவுமே அமெரிக்கா முயல்வதாகப் பார்க்கிறீர்கள். மேலும் ஈராக்கின் இதுவரையிலான சார்புத் தன்மையைக் கணக்கில் கொள்ளாது புறக்கணித்து (வசதியாக மறைத்துவிட்டு) குவைத்தை ஆக்கிரமித்ததை மட்டுமே பார்க்கிறீர்கள். எனவே, இருதரப்பையும் எதிர்க்க வேண்டுமெனக் கூறி சமப்படுத்துகிறீர்கள்.

எனவே இது தவறானதும் குறிப்பாக உமது பொதுவழிக்கு எதிரானதும் ஆகும் அல்லவா? எனவே ஈராக்கானது வளைகுடாப் பகுதியில் அமெரிக்காவின் நவகாலனிய ஆதிக்கத்தை எதிர்க்கப் புறநிலையில் ஆற்றும் பாத்திரத்தைக் கணக்கில் கொள்ளும்போதே அதனுடைய ஆக்கிரமிப்புத் தன்மையையும் கணக்கில் கொள்ள வேண்டும். எனவே, அமெரிக்காவை முழு மூச்சுடன் எதிர்ப்பதும், ஈராக்கை நிபந்தனையுடன் ஆதரிப்பதும் தானே சரி! இப்படித்தானே மார்க்ஸ் அவர் காலகட்டத்தில் உலகின் பிரதான பிற்போக்கு சக்தியின் கோட்டையான ரஷ்யாவை எதிர்த்த போர்களில் தன்னுடைய செயல் தந்திரங்களை வகுத்துக் கொண்டார்?

அடுத்து, ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையிலும் ஏகாதிபத்தியத்திற்கும் ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும் இடையிலான முரண்பாட்டை மூடிமறைத்தும், இரண்டிற்கும் இடையிலே இணக்கம் ஏற்படுத்தவும், ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறவர்களாலும் நடத்தப்படும் போர் எதிர்ப்பு அமைதிக்கான இயக்கங்களை 'உலக மக்கள் வீரத்துடன் ஆதிக்க - ஆக்கிரமிப்புப் போர் வெறியர்களுக்கு எதிராகப் பழிதீர்க்க வீதிகளில் கலகக்கொடி உயர்த்தி விட்டார்கள்' எனக் கூறி (மார்க்சிய - லெனினிய அடிப்படையைக் கைவிட்டு) விமர்சனமின்றி ஆதரிப்பதும், அணிசேர்வதும் தவறில்லையா?

— குமரன், திருவண்ணாமலை.

★ இக் கேள்வியில் நாம் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளவை உண்மைக்குப் புறம்பானவை. ஈராக் குவைத்தை ஆக்கிரமித்து வளைகுடா நெருக்கடி முற்றிய (ஆகஸ்டு '90)திலிருந்து கடைசியாக வந்த புதிய கலாச்சாரம் வரை நாம் எழுதியிருப்பவைகளே இதற்கு ஆதாரமாக உள்ளன. கடந்த ஆறுமாதமாகத் 'தூங்கி'க் கொண்டிருந்து விட்டு, வளைகுடாப் போர் தொடங்கியதும் விழித்துக் கொண்டு கூச்சல் போடும் சிலர், ஓட்டுக் கட்சிகள் செய்வதைப் போல சில வாசகர்களின் மறதியை - விமர்சனமற்ற பார்வையைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கண்டவாறு அவதூறு செய்கின்றனர்.

''தமது ஆதிக்கத்துக்குத் தடையாக நிற்கும் எவரையும் அழித்தொழித்து அடிமைப்படுத்தும் ஏகாதிபத்தியங்கள் அதேவழியில் இன்று ஓரணியாய் நின்று ஈராக்கை மிரட்டிப் பணியவைக்க முயற்சிக்கின்றன.'' என்றும், எண்ணெய் வரத்துக்காக மட்டுமின்றி சூயஸ்கால்வாய் - கடல்வழி முக்கியத்துவம் கருதியும் வளைகுடாவில் தனது ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் இவ்வாறு செய்வதாகவும் புதிய ஜனநாயகம் (ஆகஸ்டு 16 - 31, '90) இதழில் எழுதினோம். அடுத்த மாதமே ''வளைகுடா நெருக்கடி : அமெரிக்கக் கழுகு அடைகாத்ததன் விளைவு'' என்று அட்டைப்படக் கட்டுரையில் ஈராக்கின் ஏகாதிபத்தியச் சார்புத் தன்மை பற்றி மேலும் விரிவாக எழுதினோம். ''உலகப் பொருளாதாரத்தின் உயிர்நாடியான எண்ணெய் வளம் கொழிக்கும் வளைகுடாவைத் தனது அரசியல், பொருளாதார, ராணுவக் கட்டுப்பாட்டில் வைக்கவும்தான் இந்தப் போரை அமெரிக்கா தொடங்கியுள்ளது'' என்று பு.க. (பிப் '90) எழுதியுள்ளது. ஆகவே வாசகர் குறிப்பிடும் எதையும் மறுப்பதோ, கண்டு கொள்ளாது புறக்கணிப்பதோ, வசதியாக மறைத்து விடுவதோ, நாம் செய்யவில்லை.

அதேசமயம், விரிவான இக்கேள்வியில் ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்புப்பற்றி மட்டுமே உள்ளது; ஈராக்கே ''குருதீஷ்'' இன மக்களை விஷவாயுக் குண்டு வீசிக் கொன்று ஒடுக்குவது, ஈரான் மீதான, எட்டாண்டு ஆக்கிரமிப்புப் போர் போன்ற அதன் வளைகுடாப் பிரதேச ஆதிக்கம் பற்றி ஒரு வார்த்தைகூட கிடையாது. இந்த அம்சத்தை விட்டுவிட்டுப் பார்ப்பதாலேதான், உலக மேலாதிக்க, மேல்நிலை வல்லரசு அமெரிக்காவுக்கும் பிரதேச மேலாதிக்க வல்லரசு ஈராக்குக்கும் இடையிலான நாடு பிடிக்கும் இப்போர் ஏதோ அமெரிக்காவின் நவகாலனிய ஆதிக்கத்தை எதிர்த்து புறநிலை பாத்திரமாற்றுவதாகத் தெரிகிறது. இது வெறும் புறநிலைத் தோற்றம் தானே தவிர போரின் உள்ளடக்கம் அல்ல.

வளைகுடாப் போர் பற்றிய நமது நிலைப்பாடு நமது சர்வதேசப் பொதுவழிக்கு எதிரானதும் அல்ல. ஏகாதிபத்தியங்களின் காலனி ஆதிக்கம், மேல்நிலை வல்லரசுகளின் உலகமேலாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசங்கள் - நாடுகளும் மக்களும் பிரதானச் சக்திகளாக ஐக்கியப்பட வேண்டும் என்பதுதான் நமது சர்வதேசப் பொதுவழி. மூன்றாம் உலகின் வேறொரு நாடு - தேசத்தை ஆக்கிமிப்பது, கைப்பற்றிக் கொள்வதில் ஏகாதிபத்தியங்கள் - மேல்நிலை வல்லரசுகளுடன் நடக்கும் போரில் - மோதலில் - முரண்பாட்டில் ஈடுபடும் எந்தஒரு மூன்றாம் உலக நாட்டுடன், தேசத்துடன் ஐக்கியப்படுவதோ, ஆதரவு தருவதோ நமது நிலைப்பாடு அல்ல. மாறாக இப்படி நாடுபிடிக்கும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள சொந்த நாட்டையே போரில் தோற்கடிக்கச் செய்வதும் அதன் ஆக்கிரமிப்பு யுத்தத்தையே உள்நாட்டு புரட்சி யுத்தமாக மாற்றுவதும்தான் பாட்டாளி வர்க்கத்தின் கடமை என்பதுதான் நமது நிலைப்பாடு.

இச்சர்வதேசப் பொதுவழிக்குப் பொருத்தமாகத்தான் வளைகுடாப் போர் பற்றிய நமது நிலைப்பாடு உள்ளது. ஆனால், இதையே

**அமெரிக்கா, ஈராக் இரண்டையுமே எதிர்ப்பது உங்களது சர்வதேச பொதுவழிக்கு எதிரானது அல்லவா?**



படிப்பகம்

www.padippakam.com

திரித்துச் சொல்லி, நிபந்தனையுடனோ, நிபந்தனை இன்றியோ ஈராக்கை ஆதரிப்பவர்களின் சர்வதேசப் பொதுவழி என்ன? அதற்குப் பொருத்தமாகவா இப்போது கொள்கை வகுத்துக் கொண்டார்கள்? ஏகாதிபத்தியக் காலனி ஆதிக்கம், மேல்நிலை வல்லரசுகளின் உலகமேலாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட நாடுகள், தேசங்களின் மக்கள் தேசிய விடுதலை இயக்கங்களோடுதான் ஐக்கியப்பட முடியும்; அதுதான் சரி! அவற்றின் பிற்போக்கு ஆளும் வர்க்க அரசுகளோடு ஐக்கியப்பட முடியாது! அப்படிச் செய்வது தேசிய விடுதலை இயக்கங்களையும், வர்க்கப் போராட்டங்களையும் கைவிடும் துரோகம் என்று இவர்கள் சொன்னார்கள். ஆனால், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரான யுத்தத்தைக் கூட ஈராக் நடத்தவில்லை; வாசகரே குறிப்பிடுவதைப் போல, குவைத்தை ஆக்கிரமித்து, அதைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத்தான் போரிடுகிறது; அதைவிட முக்கியமாக வளைகுடா பிராந்திய மேலாதிக்கத்தை நிறுவுவதற்காகவும் போரிடுகிறது; அப்படியிருக்கும்பாது ஈராக்கை ஆதரிப்பது இவர்களின் சர்வதேசப் பொதுவழிக்கு முரண்பாடாக இல்லையா?

மேலும் லெனினிய போதனையின்படி, ''அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தமாக மாற்றுவோம்!'' ''யுத்தம் மூளுமானால் அதை உள்நாட்டு யுத்தமாக, வர்க்கப் போராக மாற்றுவோம்!'' என்றார்கள், இந்த ஈராக் ஆதரவாளர்கள். இப்போது ஈராக் நடத்துவது அநீதியான யுத்தமா? நீதியான் யுத்தமா? இந்த லெனினிய போதனை ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான நாடு பிடிக்கும் யுத்தங்களுக்கு மட்டும்தான் பொருந்துமா? எந்த வகையிலும் நியாயமற்ற, மிகக் கொடூரமான, பிற்போக்கான, நாடுபிடிக்கும் நோக்கமுடையது என்பதற்காகத்தானே ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான யுத்தங்கள் பற்றி லெனின் அவ்வாறு போதித்தார்? நாடுபிடிக்கும் நோக்கத்துக்காக - பிடித்து வைத்துக் கொண்டுள்ள நாட்டின் மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதற்காக ஏகாதிபத்தியத்துடன் பிராந்திய ஆதிக்கத் துணைவல்லரசு நடத்தும் போர்களுக்கு லெனினது அந்தப் போதனை பொருந்தாதா?

இல்லையென்றால் ஈராக் நடத்தும் யுத்தம் எந்த வகையில் நீதியானது என்று சொல்ல வேண்டும். ஈராக் தனது ஏகாதிபத்திய சார்புத் தன்மை, தன்மீதான ''நவகாலனியாதிக்கம்'' ஆகியவற்றுக்கு எதிராகவா யுத்தம் நடத்துகிறது? தனது அரசியல், பொருளாதார சுதந்திரம், தேசிய இறையான்மை - சுயாதிபத்தியம் ஆகியவற்றுக்காகவா போரிடுகிறது? இல்லை. இன்னொரு தேசத்தின் விடுதலைக்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடுகிறதா? இவற்றிலே ஏதாவது இருந்தால் ஈராக் நடத்துவது நீதியான யுத்தம் அல்லது லெனினது மேற்கண்ட போதனை இதற்குப் பொருந்தாது என்று சொல்லலாம்! இல்லையே! இவற்றிலெல்லாம் ஏகாதிபத்தியத்துக்கு ஊழியஞ் செய்து வந்திருப்பதோடு பிராந்திய ஆதிக்கத்துணை வல்லரசு என்கிற முறையில் தனக்குரிய பங்கு கிடைக்குமானால் ஈராக் இப்போதும் அதற்குத் தயாராக இருக்கிறது என்பதுதானே உண்மை.

ஈராக் இப்போது நடத்தும் யுத்தம் எந்த வகையிலும் நீதியானது இல்லை என்பதால்தான் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய எதிரிகளின் குற்றங்களைச் சொல்லித் தனது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகிறது. ஒரு தரப்பின் ஆக்கிரமிப்பு, ஆதிக்கக் குற்றங்கள் இன்னொரு தரப்பின் அதே தன்மையுடையவைகளை நியாயப்படுத்திவிட முடியாது. ஆகவே எந்தத் தரப்பிலும் நியாயமில்லாத ஆக்கிரமிப்பு - ஆதிக்க, நாடுபிடிக்கும் இந்த யுத்தத்தை அநீதியானது, கொடூரமான - பேரழிவு விளைவிக்கக் கூடியது, பிற்போக்கானது, கொள்ளையடிப்பதற்கானது ஆகிய ஏகாதிபத்தியப் போர்களின் தன்மைகளைக் கொண்டது என்கிறோம். இத்தகு யுத்தங்களின் போது எத்தரப்பையும் ஆதரிக்க முடியாது; கூடாது. மாறாக யுத்தங்களின் விளைவான அரசியல், பொருளாதார நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு இரு தரப்பினது ஆளும் வர்க்கங்களையும் வீழ்த்தும் புரட்சிகர யுத்தத்தைத் தொடுக்க வேண்டும். இதுதான் அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தமாக மாற்றுவது என்றார் லெனின்; போதிய பலமில்லையென்றால் அரசுகளுக்குரிய யுத்தகால நெருக்கடிகளையும்; மக்களது வெறுப்புகளையும் புரட்சியை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்த வேண்டும் என்கிறார் லெனின் (பார்க்க : சோசலிசமும் போரும், பக். 18.)

அமெரிக்கா, ஈராக் ஆகிய இரண்டு தரப்பிலுமே நியாயம் இல்லை என்று தெரிந்தும், சதாமுக்குள்ள ஆதரவில் இருந்து ஆதாயம் தேடிக் கொள்ளும் சந்தர்ப்பவாத நோக்கத்தோடு சில வாதங்களை முன்வைத்து ஈராக் ஆதரவு நிலை எடுக்க வேண்டும்; இல்லையானால், இரு தரப்பையும் சமமாகப் பார்க்கிறோம் என்று சிலர் கூறிவருகின்றனர். அரசியல் ஆதாயத்துக்காக யாரோடும் எந்த அடிப்படையுமின்றிக் கூட்டுச் சேர்ந்து, எந்த நடவடிக்கைக்கு வேண்டுமானாலும் போவதையே கொள்கையாகக் கொண்ட ''முன்னோடி'' யினர் சதாமுக்குப் பெருகிவரும் ஆதரவையே காரணமாக வைக்கின்றனர். இதற்காக அடுக்கடுக்காகப் புளுகுகிறார்கள். (பார்க்க : '90 நவம்பர் - டிசம்பர்,முன்னோடி,பக். 8 - 11)

அமெரிக்கா, ஈராக் ஆகிய இரண்டு தரப்பினது ஆக்கிரமிப்பு - ஆதிக்கக் குற்றங்கள், படை வலிமை, குவித்திருக்கும் நாசகார ஆயுதங்கள் போன்றவற்றையும் போரின் முடிவு - விளைவுகளையும் ஒப்பீடு செய்து, அமெரிக்கா உலக மக்களின் பொதுவான, முதன்மையான கொடிய எதிரி; ஆகவே ஈராக்கை ஆதரிக்க வேண்டும் என்பது இன்னும் சிலரது வாதம். பிரிட்டன், பிரான்சு, ருசியா, இத்தாலி ஆகிய வல்லரசுகள் ஒருபுறமும், ஜெர்மனி, ஆஸ்திரியா, அங்கேரி ஆகிய வல்லரசுகள் மறுபுறமும் நின்று முதல் உலகப் போரை நடத்தின. இவ்விரு தரப்புகள் எவையிடத்தும் போருக்கான நியாயமில்லையாதலால், அவற்றை ஒப்பீடு செய்து ஏதாவது ஒரு தரப்பை ஆதரிப்பது என்று லெனின் முடிவு செய்யவில்லை. இரண்டு தரப்பையும் எதிர்த்து முறியடிக்கும்படி அறைகூவல் விட்டார். நூறு அடிமைகளைச் சொந்தமாகக் கொண்டுள்ள ஆண்டைக்கும், 200 அடிமைகளைச் சொந்தமாகக் கொண்டுள்ள ஆண்டைக்கும் இடையே அடிமைகளை மேலும் 'நியாயமான' முறையில் பகிர்ந்து கொள்வதற்காக சண்டை நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; இங்கே தற்காப்புக்காகவோ, தந்தையர் நாட்டைக் காப்பதற்காகவோ போரிடுவதாக குறைவான அடிமைகளைச் சொந்தமாகக் கொண்டுள்ள ஆண்டை கூறுவானேயானால், அது அப்பட்டமான வரலாற்று மோசடியாகும். பொது மக்களை, குட்டி முதலாளிகளை, வெகுளி - பாமரர்களைப் படுமோசடி செய்து ஏமாற்றுவதாகும் என்று இதற்கு லெனின் உதாரணம் சொன்னார்.

ஒரு தரப்பின் ஆக்கிரமிப்பு, ஆதிக்கக் குற்றங்கள் இன்னொரு தரப்பின் அதே தன்மையுடையவைகளை நியாயப்படுத்திவிட முடியாது. ஆகவே எந்தத் தரப்பிலும் நியாயமில்லாத ஆக்கிரமிப்பு - ஆதிக்க, நாடு பிடிக்கும் இந்த யுத்தத்தை அநீதியானது, கொடூரமான - பேரழிவு விளைவிக்கக் கூடியது, பிற்போக்கானது, கொள்ளையடிப்பதற்கானது ஆகிய ஏகாதிபத்தியப் போர்களின் தன்மைகளைக் கொண்டது என்கிறோம்.

இது ஏகாதிபத்தியம் மற்றும் அவற்றுக்கிடையிலான போர்களுக்கு மட்டுமன்று; பிராந்திய ஆதிக்க துணைவல்லரசுகளுக்கும், அவற்றுக்கிடையேயும், அவற்றுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயும் நடக்கும் போர்களுக்கும் கூட பொருந்தும். ஏனெனில், லெனின் சித்தரிக்கும் ஆதிக்க - ஆக்கிரமிப்பு, நாடு பிடிக்கும் தன்மையுடையதுதான் இந்தப் போர்; அமெரிக்காவைப் போல முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக இல்லாவிட்டாலும், அன்றைய ஜாரிச ருசியாவைப் போல, ஈராக் ஒரு ராணுவ ஏகாதிபத்தியமாக உள்ளது; எனவேதான் இதை பிராந்திய ஆதிக்கத் துணை வல்லரசு என்கிறோம்.

இக்கேள்வி கேட்ட வாசகரைப் போலவே, சமரன் குழுவினரும், இவர்களாகக் கற்பித்துக் கொண்ட இரு காரணங்களைக் கூறி ஈராக்கை ஆதரிக்கின்றனர். வளைகுடாப் பிரதேசத்தில் ஏகாதிபத்தியத்தின் நவகாலனித்துவ ஆதிக்கத்தை எதிர்த்து ஈராக் போரிடுகிறதாம். அதன் போர் நடவடிக்கைகள் புறநிலையில் நவகாலனி ஆதிக்கத்தை ஓரளவு பலவீனப்படுத்தக் கூடியதாம்! தேசிய நலன்களை விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொள்ளாமல் ஏகாதிபத்தியத்துடன் உறுதியாகப் போரிடுகிறதாம்! பாட்டாளி வர்க்க சித்தாந்தத்துக்குப் பதிலாக முழுக்கவும் முதலாளித்துவ சித்தாந்தத்தில் மூழ்கிப் போனதன் விளைவுதான் இவர்களின் இந்த வியாக்கியானங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

உலகம் முழுவதும் ஏற்கனவே, நவகாலனித்துவ - மேலாதிக்கத்தினால், ஏகாதிபத்தியவாதிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு பிரதேசத் துணை வல்லரசு பிராந்திய ஆதிக்ககம் - ஆக்கிரமிப்பு - விரிவாக்கத்தில் இறங்கி, ஆக்கிரமித்த நாட்டைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஏகாதிபத்திய வாதிகளிடம் போரிடுகிறது. இதை மறுபங்கீட்டிற்கான போராகத்தான் கருத வேண்டுமே தவிர, ஏகாதிபத்திய நவகாலனி ஆதிக்கத்துக்கு எதிரானதாக எப்படிக் கருத முடியும்? ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவனுக்கு எதிராக அவனது இளைய பங்காளி கொள்ளையில் உரிய - கூடுதலான பங்கு கேட்டு நடத்தும் சண்டை எந்த வகையில் கொள்ளைக்கே எதிரானதாகும்? கொள்ளைக் கூட்டத்தலைவனைப் பலவீனப்படுத்தும் என்பதற்காக இந்தப் பங்குச் சண்டையில் இளைய பங்காளியை ஆதரிக்க முடியுமா?

இந்தச் சண்டையிலே, இளைய பங்காளியின் உறுதிப்பாட்டையும் துணிச்சலையும் யாராவது பாராட்டி ஆதரிக்க முடியுமா? அதே போலத்தான் ஈராக் தனது தேசிய நலன்களை விட்டுக் கொடுக்காது, சமரசமின்றி உறுதியாக ஏகாதிபத்தியத்துடன் போரிடுகிறது என்கிறார்கள். பிராந்திய ஆதிக்க - ஆக்கிரமிப்பு - விரிவாக்கத்தில் இறங்கி அடுத்தடுத்து அண்டை நாடுகள்மீது போர் தொடுக்கும் ஒரு பிரதேச இணைவல்லரசின் தேசிய நலன்களில் காட்டும் உறுதிப்பாட்டைப் புகழ்ந்து ஆதரிப்பது என்பது கேலிக்கூத்தும் - வக்கிரமும் அல்லவா? ஏகாதிபத்தியத்தால் ஈராக்கின் ''தேசிய'' நலன்கள் பாதிக்கப்

**பிற தேசங்களின் சுயநிர்ணய உரிமையினை ஈராக் அங்கீகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அதை ஆதரிப்பது என்று சிலர் கூறுகின்றனர். இந்த நிபந்தனையை ஏற்காத நிலையிலேயே ஈராக்கை ஆதரிக்கிறார்களே, இது யதார்த்தத்தில் நிபந்தனையற்ற ஆதரவுதானே! இவர்களது நிபந்தனையை ஈராக் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் அதை ஆதரிப்பது என்பது நடைமுறையில் நிபந்தனையைப் பொருளற்றதாக்கி விடுவதோடு, ''புரட்சிகர மோசடி''க்குத்தான் பயன்படுகிறது!**

படுவதைப் போல ஈராக்கால் அண்டைநாடுகளின் தேசியநலன்கள் பாதிக்கப் படவில்லையா? குவைத்தை விடுவிக்கத்தான் இந்த யுத்தமென்று அமெரிக்கா புளுகுவதைப் போலவே, இஸ்ரேலின் பாலஸ்தீன - லெபனான் ஆக்கிரமிப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, அரபு - இசுலாமிய ஒருமைப்பாடு ஆகியவை பற்றி ஈராக் பேசுவதும் குவைத் ஆக்கிரமிப்பு உட்பட பிராந்திய ஆதிக்கத்துக்காகத்தான். இந்த ஈராக் ஆதரவாளர்களே அதை ஒப்புக் கொள்கிறார்கள். பிறகு இந்தப் போரில் ஈராக்கின் தேசிய நலன்கள், வளைகுடாப் பகுதியில் நவகாலனித்துவ எதிர்ப்பு ஆகியவற்றுக்காக ஈராக் போரிடுவதாக ஏன் கருத வேண்டும்?

இந்த வாசகரும், சமரன்குழுவினரும், 1789 முதல் 1871 வரை நிலப் பிரபுத்துவத்தை எதிர்த்து நடந்த போர்களில் முதலாளிகளது பாத்திரம் பற்றிய மார்க்சிய - லெனினிய ஆசான்களது அணுகுமுறையை மேற்கோள் காட்டி, ஈராக்கின் மேற்படிப் பித்தலாட்டத்துக்கு வக்காலத்து வாங்குகின்றனர். அதாவது ஆக்கிரமிப்பு, கொள்ளையடித்தல் இருந்தால் கூட நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்கும் வரலாற்றியல் முக்கியத்துவம் அப்போரில் இருந்தது. அதேபோல நவகாலனித்துவத்தை வீழ்த்துவதில் ஈராக்குக்கும் பங்கு இருக்கிறது என்கின்றனர். கூடவே ரஷ்ய எதிர்ப்புப் போர்களில் மார்க்சின் செயல் தந்திரம் பற்றி வாசகர் குறிப்பிடுகிறார்.

போர்களின் வரலாற்றுப் பின்னணியைத் தொகுத்துக் கூறும் லெனினுடைய படைப்பின் முதற்பகுதியைத்தான் இவர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள். ஆனால், அதே படைப்பில் ஒன்பது பக்கங்கள் தள்ளிப் பின்வருமாறு லெனின் எழுதியுள்ளார். ''மூன்றாம் நெப்போலியன், ஜாரோடு சேர்ந்து கொண்டு ஜெர்மனியைப் பல ஆண்டுகளாக ஒரு நிலப்பிரபுத்துவப் பிளவு நிலையில் ஒடுக்கி வைத்திருந்தான். அவனைத் தோற்கடிக்கும் வரையில்தான் 1870 - '71 யுத்தத்தில் ஜெர்மனியின் பங்கு வரலாற்று ரீதியில் முற்போக்காக இருந்தது. ஆனால், அல்சாஸ், லெபனானைக் கைப்பற்றிக் கொண்டு பிரான்சைக் கொள்ளையிடுவதாக, யுத்தம் முன்னேறியவுடன் மார்க்சும் எங்கெல்ஸும் ஜெர்மனியை ஆணித்தரமாகக் கண்டித்தனர். யுத்தத்தின் துவக்கத்திலே கூட யுத்தக் கடன் - செலவுகளுக்கு பெபலும் லீப்னெக்கும் ஓட்டுப்போட மறுத்ததை மார்க்ஸ் - எங்கெல்ஸ் அங்கீகரித்தனர். முதலாளித்துவ வர்க்கத்துடன் இணைந்து போக வேண்டாம்; மாறாக பாட்டாளிகளின் வர்க்க நலன்களுக்கான தனித்துவத்தைக் கடைபிடியுங்கள் என்று வழிகாட்டினர். தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ முற்போக்கு யுத்தம் பற்றிய மார்க்சு எங்கெல்சின் இந்த மதிப்பீட்டை இப்போதைய ஏகாதிபத்தியப் போருக்குப் பிரயோகிப்பது உண்மையைக் கேலிக்கூத்தாக்குவதாகும். (மார்க்ஸ் - எங்கெல்சின்) இந்த மதிப்பீடு 1845 - 55 யுத்தத்துக்கும், 19 ஆம் நூற்றாண்டின் எல்லாப் போர்களுக்கும் மிகவும் சாலப்பொருத்தமாயிருக்கும்; (ஏனென்றால்) அப்போது நவீன ஏகாதிபத்தியம் இல்லை; சோசலித்துக்கான முதிர்ந்த புறநிலைமைகள் இல்லை; மோதிக்கொள்ளும் பகைநாடுகள் எதிலும் மக்கள்திரள் சோசலிசக் கட்சிகள் இல்லை; பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான யுத்தத்தை ஒட்டி, ''பாட்டாளி வர்க்கப் புரட்சி'' என்றதொரு செயல்தந்திரத்தை பாசல் (மாநாட்டு) அறிக்கை வகுத்ததே, அந்த நிலைமைகள் எதுவுமில்லை'' (கூஷ பக்.19)

இவ்வாறு சொன்ன லெனின் தொடர்ந்து முற்போக்கு முதலாளித்துவ சகாப்தத்திற்குரிய யுத்தங்கள் பற்றிய மார்க்சின் கண்ணோட்டத்தை இன்றைய சோசலிச சகாப்தத்திற்கு மேற்கோள் காட்டிப் பிரயோகிப்பது வெட்கமின்றி மார்க்சியத்தைச் சிதைப்பதும், சோசலிசக் கருத்துக்குப் பதில் முதலாளித்துவக் கருத்தை வைப்பதாகும் என்று சாடினார். இதைத்தான் ஈராக்குக்கு வக்காலத்து வாங்குபவர்கள் செய்கின்றனர்.

இறுதியாக, பிற தேசங்களின் சுய நிர்ணய உரிமையினை ஈராக் அங்கீகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆதரிப்பது என்று இவர்கள் கூறுகின்றனர். இதன்மூலம் அமெரிக்காவைப் போல ஈராக் நடத்துவதும் ஆக்கிரமிப்பு - அநீதிப் போர்தான் என்பதை இவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். அதாவது ஈராக் நடத்தும் ஆக்கிரமிப்பு - அநீதிப் போரையே ஜனநாயக - முற்போக்கு - நீதிப் போராக மாற்றும் 'திருப்பணி'யை மேற்கொண்டுள்ளனர். சரி! இவர்களது நிபந்தனையை ஈராக் ஏற்றுக் கொண்டால் ஆதரிப்பதா? ஏற்றுக் கொண்டாலும், இல்லையானாலும், ஆதரிப்பதா? எது இவர்கள் நிலைப்பாடு? இவர்களது நிபந்தனையை ஏற்றால்தானே ஈராக்கின் யுத்தம் ஜனநாயகமானது - முற்போக்கானது - நீதியானது?! அந்த நிலையில் ஈராக்கை ஆதரிப்பதுதானே சரியானது?! உண்மையில் இவர்களது, நிலைப்பாட்டுக்காவது விசுவாசமாக இருப்பார்களேயானால் இந்த நிபந்தனையை ஏற்காத வரையில் ஈராக்கை ஆதரிக்கக் கூடாது. இவர்களது நிபந்தனை எப்படிச் சரியானது, அவசியமானது என்பதைப் பிரச்சாரம் செய்து பொதுக்கருத்தை பொது நிர்பந்தத்தை உருவாக்க வேண்டும். அவ்வாறின்றி இவர்களது நிபந்தனையை ஏற்காத நிலையிலேயே ஈராக்கை ஆதரிக்கிறார்களே, இது யதார்த்தத்தில் நிபந்தனையற்ற ஆதரவுதானே! இவர்களது நிபந்தனையை ஈராக் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும், அதை ஆதரிப்பது என்பது நடைமுறையில் நிபந்தனையைப் பொருளற்றதாக்கி விடுவதோடு, ''புரட்சிகர மோசடி''க்குத்தான் பயன்படுகிறது!

திரிபுவாதிகள், சீர்திருத்த வாதிகள் தலைமையிலான போர் எதிர்ப்பு - அமைதிக்கான இயக்கங்களை மா.லெ அடிப்படையைக் கைவிட்டு விமர்சனமின்றி நாம் ஆதரிப்பதாகவும், அணி சேர்வதாகவும் வாசகர் கூறுகிறார். பொருளாதாரவாத அடிப்படையிலானது தான் என்றாலும் திரிபுவாதிகள் தலைமையிலான தொழிலாளர்கள் போராட்டங்களை நாம் ஆதரிப்பதில்லையா? கூடவே புரட்சிகர அரசியல் - அமைப்பு முழக்கங்களை முன்வைத்து சரியான பாதைக்குக் கொண்டு வர முயலுகிறோம். அதேபோல இந்தப் போரில் நாடுபிடிக்கும் ஆதிக்க - ஆக்கிரமிப்பாளர்களுக்கு விட்டுக்கொடுத்து சாந்தப்படுத்தும் சமரசவாதிகளை எதிர்த்த முழக்கங்களை - அம்பலப்படுத்துதல்களை வைக்கிறோம். ஆகவே விமர்சனமின்றி ஆதரிப்பது, அணிசேர்வதாகச் சொல்வது சரியல்ல.



படிப்பகம்



ஈராக் தலைநகர் பாக்தாத்: போர் பாதுகாப்பு நிலவறையில் உறங்கிய 700க்கும் மேற்பட்ட மக்களை ஏவுகணை வீசி அமெரிக்கா படுகொலை செய்த கோரம்.



ஆஸ்திரிய நாட்டின் இன்ஸ்பெர்க் நகரம்: அமெரிக்க டாங்கிகளை ஏற்றிச் செல்லும் சரக்கு ரயிலை மறிக்கும் அந்நாட்டுப் பெண்கள்.

அமெரிக்க இராணுவத் தலைமையகம் - பெண்டகன்: போர் எதிர்ப்பு போராட்டம்.





பாக்தாத்: பன்னாட்டு கொலை

அமெரிக்காவின் கலிபோர்னி





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



ாடுவீச்சுக்கு இலக்கான மழலை.

போர் எதிர்ப்பு வீரம்.




# போர் எதிர்ப்புப் புயல்

வளைகுடாப் போருக்கு எதிராக, அங்கே அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தி வரும் பேரழிவுக் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராக உலக மக்கள் பொங்கி எழுந்து, கோபாவேசத்துடன் நடத்தும் இயக்கங்கள் வரலாறு காணாதவை.

வளைகுடாப் போரில் ஒருவேளை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு - ஆதிக்க வெறியர்கள் இராணுவ ரீதியில் வெற்றி கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு எதிராக உலக மக்கள் நடத்தும் யுத்த எதிர்ப்பு - சமாதான இயக்கங்களை ஒருநாளும் அவர்கள் வெல்ல முடியாது.

அமெரிக்கா வளைகுடாவில் துவங்கியதோ ''பாலைவனப் புயல்'' என்கிற ஆக்கிரமிப்பு யுத்தம். ஆனால் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான பெரும் புயல் உலக மக்கள் மனங்களில் வீசுகிறது. எவ்வளவு பேர், எந்த முறையில், எந்த நேரத்தில் செய்கிறோம் இது என்ன பாதிப்பு - விளைவை ஏற்படுத்தி விடும் என்றெல்லாம் மக்கள் எவரும் அலட்டிக் கொள்ளவில்லை. சாத்தியமான எல்லா வகையிலும் எதிர்ப்பு, எழுச்சி, ஆவேசம்தான்!

ஒரு 80 வயது மூதாட்டி - வியத்நாம் போரிலே பேரனைப் பறிகொடுத்தவள். வெள்ளை மாளிகையின் முன் சாகும்வரை பட்டினிப் போர் துவங்கினாள். யாரோ அடையாளம் தெரியாதவர் - மலேசியாவிலுள்ள தூதரகக் காவலரைச் சுட்டுக் கொன்றார்.

ஈராக்கின் பதுங்கு குழிகளில் மாண்டு போனவரைக் குறிக்கும் வகையில் அமெரிக்காவின் பெண்டகன் முன்பாக பலர் மாண்டவரைப் போல தாறுமாறாய் வீழ்ந்து கிடந்தனர். வெள்ளை மாளிகையின் முன்பாக ஜார்ஜ் புஷ், ஜான் மேஜர் கொடும்பாவிகளும் அமெரிக்க, இங்கிலாந்து, இஸ்ரேலிக் கொடிகளும் கொளுத்தப் பட்டன. வெள்ளை மாளிகைக்குப் பின்புறம் வரிசையாக சிலுவைகளை நட்டனர் - வளைகுடாப் போரில் பலியாகும் அமெரிக்கர்களை குறிப்பதாக.

ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்காவின் பல நகரங்களில் பல லட்சம் பேர், பல்வேறு வகைகளில் பேரணி, ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ஜப்பானின் பிரதமர் மீது செருப்பு வீசித் தாக்கினர். ஆஸ்திரேலியாவில் 12 தாய்மார்கள் யுத்த முனைக்கு அமெரிக்கக் கவச வண்டிகளை ஏற்றிச் செல்லும் ரயில் முன்பு உட்கார்ந்து தடுத்தனர்.

''குவைத்தில் எண்ணெய்க்குப் பதில் உருளைக்கிழங்கு விளையுமானால் போருக்குப் போவாயா?'' ''எண்ணெய்க்காக ரத்தம் சிந்த மாட்டோம்'' ''ஊழல் வழக்கில் சிறைக்குப் போகவேண்டிய உன் மகள் நீல், புஷ்ஷை அனுப்பு'' ''வளைகுடாப் போருக்கு நீக்ரோக்கள்தான் பலிகடாவா?'' என்கிற முழக்கங்கள் அமெரிக்காவெங்கும் பரவுகின்றன.

இந்தோனேசியாவிலிருந்து மொரிஷியானா வரையில் இசுலாமிய, அரபு மக்களின் ஆத்திரமும், எழுச்சியுமே பன்மடங்காகியுள்ளது. ''புஷ் - கொலைகாரன்'', ''மித்தராண்ட் - நாய்'', ''சவுதி அரசன் பாத் - கழுதை'' என்று முழங்கிக் கொண்டு லட்சக் கணக்கானோர் மொராக்கோ, எகிப்து, லிபியா, ஜோர்டான், சிரியா, பாகிஸ்தான் வீதிகளில் தினமும் போராடுகின்றனர்.

வளைகுடாவில் நிறுத்தப்பட்டுள்ள மொராக்கோ, சவுதி, பாகிஸ்தான் படைகள் அமெரிக்கர்களைச் சுடுகின்றன. பெரு, பெய்ரூட், சைப்ரஸ், ஏதென்ஸ், லண்டன், டெஹ்ரான், இசுலாமாபாத் முதல் பிலிப்பைன்ஸ் வரை வங்கிகள், தூதரகங்கள் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள் ''தீவிரவாத'' தாக்குதல் - குண்டு வெடிப்புகளுக்கு இலக்காகின.

மக்களின் உணர்வுகளை என்றுமே மதியாத ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு வெறியர்களோ யுத்தமுனை தோல்விகளை ஈடுகட்ட சிவிலியன் படுகொலைகளை அதிகரித்து பெருநாசம் விளைவிக்கின்றனர். பாக்தாத் குடிமக்கள் பதுங்குமிடமான நிலவறை மீது லேசர் குண்டுகளைத் திட்டமிட்டு வீசி குழந்தைகள், பெண்கள் பல நூறு பேரைக் கொன்றனர். சாக்கடைத் தண்ணீர் குழாய்கள் மீது குண்டு வீசி கொடிய நோய்கள் பரப்புகின்றனர். உலகின் பழமையான மொசபடோமிய நினைவகங்கள், கிறித்துவ - இசுலாமியப் புனிதத் தலங்கள் முதல் மருத்துவ மனைகள், தப்பி ஓடும் அகதிகள், குழந்தைகளுக்கான உணவுத் தயாரிப்பகங்கள் மீது குண்டு மாரிப் பொழிந்து அழிக்கின்றனர்.

ஆத்திரங்கொண்ட அரபு நாடுகளின் மக்கள், குறிப்பாக தாய்மார்கள்கூட ஏகாதிபத்தியப் பத்திரிகையாளர்களைக் கண்டால் காறி உமிழ்கின்றனர். கையில் கிடைத்ததை எடுத்து வீசுகின்றனர். சிகப்புச் சாயத்தில் கையை நனைத்து அமெரிக்கத் தூதரகச் சுவர்களில் பதிக்கின்றனர்.

ஆற்றாது பொங்கி எழும் இந்த ஆவேசம், உணர்வுத் தீ ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களைச் சும்மா விடாது. அவர்களது கிரிமினல் நாசகாரக் குற்றங்களுக்கு தண்டனை அனுபவிக்காமல் தப்பிவிட முடியாது.



படிப்பகம்

# சதாமின் மறுபக்கம்

www.padippakam.com

**அமெரிக்க தாக்குதலால் நிலைகுலைந்து போயுள்ள ஈராக் மீது உலக மக்கள் காட்டும் அனுதாபமும், அமெரிக்க எதிர்ப்புணர்வும் சதாம் உசைனுக்கு பெரும் ஆதரவையும் புகழையும் தேடித் தந்துள்ளது. அவரது கடந்த காலத்தைப் புரட்டிப் பார்க்கும்போது இப்பெருமைக்கு அவர் தகுதியுடைவராகத் தெரியவில்லை.**

அமெரிக்கா மற்றும் 28 நாடுகளின் பெரும் படைகளை எதிர் கொண்டு ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து போரிட்டு வரும் சதாம் உசைன் இன்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி, ஆசியாவின் சிங்கம், உண்மையான வீரன் என்றெல்லாம் பெருமையாகச் சித்தரிக்கப்படுகிறார். சதாமின் புகைப்படங்கள், சதாம் உருவம் பொறித்த ''டீ''சர்ட்டுகள், பனியன்கள், ஸ்டிக்கர்கள் பெருமளவு விற்பனையாகும் அளவுக்கு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் வீரக் கதாநாயகனாக அவர் வலம் வருகிறார். அமெரிக்காவின் காட்டு மிரண்டித்தனமான தாக்குதலால் ஆத்திரமடைந்துள்ள அரபு மக்கள் சதாமுக்கு ஆதரவாக நின்று ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அமெரிக்க தாக்குதலால் நிலை குலைந்து போயுள்ள ஈராக் மீது உலக மக்கள் காட்டும் அனுதாபமும், அமெரிக்க எதிர்ப்பும் சதாம் உசைனுக்குப் பெரும் ஆதரவையும் புகழையும் அனுதாப அலையையும் தேடித் தந்துள்ளது.

குறுகிய காலத்திலேயே இவ்வளவு பெருமையையும் புகழையும் பெற்றுள்ள சதாம், உண்மையில் அதற்கு தகுதியுடையவர்தானா? இந்த அனுதாப - ஆதரவு அலையை அறுவடை செய்ய அவருக்கு நியாய உரிமை உள்ளதா என்றால் அவரது கடந்த கால, நிகழ் கால செயல்பாடுகள் அதற்கு எதிராக உள்ளன.

### ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியா?

இப்போது அமெரிக்காவுக்கு எதிராகப் போரை நடத்தி வரும் சதாம் உசைன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியாக வர்ணிக்கப்படுகிறார். ஆனால் நேற்று வரை அவர் அமெரிக்கா மற்றும் ரஷிய ஏகாதிபத்தியங்களின் விசுவாசமான கூட்டாளி. இதன் மூலம் ஏகாதிபத்தியங்களிடம் இருந்து கோடிக் கணக்கில் ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு வளைகுடாவில் பிராந்திய வல்லரசாக வளர்ந்தார்.

ஈராக்கின் அண்டை நாடான ஈரான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்து கொமெய்னி தலைமையில் சுதந்திர அரசை நிறுவியது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடுத்த தொடர்ச்சியான தாக்குதல்கள், மிரட்டல்கள், ஆத்திரமூட்டல்களை முறியடித்து ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நின்றது. சதாம் உசைன் ஈரானுடன் நட்பு கொண்டு அதற்கு ஆதரவாக நின்று அமெரிக்காவை எதிர்க்க முன் வரவில்லை. மாறாக, ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடன், சகோதர முஸ்லீம் நாடு என்று கூடப் பார்க்காமல் ஈரானுடன் அடாவடித்தனமான போரில் இறங்கினார்.

### ஈரான் - ஈராக் போருக்கு காரணம் யார்?

இந்த நூற்றாண்டின் மிக நீண்ட யுத்தமான 8 ஆண்டுகள் நடந்த ஈரான்-ஈராக் போருக்குக் காரணமாக இருந்து போரைத் துவக்கிய குற்றத்தைச் செய்தது ஈராக் தான். ஈரான்-ஈராக்கின் தென்பகுதி எல்லையில் ஓடும் நதியின் மீதும், ஷட்-அல்-அராப் பிராந்தியத்தின் மீதும் பாரம்பரிய உரிமை கோரி 1980 செப்டம்பர் இறுதியில் ஈராக் முதலில் தாக்குதலைத் தொடங்கியது. இந்த எல்லை தாவா குறித்து இரு நாடுகளும் 1975ல் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்று ஈரானின் எல்லையிலுள்ள இன்னும் சில பிராந்தியங்களைக் கைப்பற்றிக் கொண்டு தாக்குதலை தீவிரமாக்கினார் சதாம் உசைன். இது ஈராக்கின் ஆத்திரமூட்டும் நடவடிக்கை என்று போரில் இறங்காமல் இருந்த ஈரான் 1981 மே மாதத்திற்குப் பின்னரே எதிர்த் தாக்குதலைத் தொடுத்தது.

ஈரானின் - கொமெய்னியின் ''இஸ்லாமியப் புரட்சி'' தனது நாட்டில் பரவினால் தனது ஆதிக்கத்துக்கு ஆபத்து என்பதாலேயே தேசிய வெறியூட்டி இப்போரைத் துவக்கினார் சதாம். இதே காரணத்துக்காக குவைத், சௌதி அரேபியா முதலான இதர அரபு நாடுகள் சதாம் உசைனை ஆதரித்து ஈரானை அழிக்க ஏராளமான நிதியும் ஆயுதங்களும் கொடுத்தன. வளைகுடாவில் தமது ஆதிக்கத்துக்குத் தடையாக விளங்கும் ஈரானைத் தாக்கி அழிக்கும் நோக்குடன் அமெரிக்க, ரஷிய ஏகாதிபத்தியங்களும் பெருமளவு நவீன ஆயுதங்களைக் கொடுத்து சதாம் உசைனை ஆதரித்து உசுப்பி விட்டன.

**ஈராக்கின் விமான குண்டு வீச்சுக்கு பலியான ஈரான் குடிமகன்; சதாம் உசேனின் பிராந்திய ஆதிக்க வெறியின் விலை?**



இப்போரில் மிகவும் மனிதத் தன்மையற்ற முறையில் ஈரானிய சிவிலியன்கள் வாழும் பகுதியில் தீக் குண்டுகளையும் விஷ வாயு குண்டுகளையும் ஏவினார் சதாம் உசைன். 8 ஆண்டுகள் நடந்த இக்கொடிய போரில் இரு தரப்பிலுமாக 3.5 லட்சம் பேர் மாண்டனர். 10 லட்சம் பேர் படுகாயமடைந்தனர். ஒரு லட்சம் கோடி டாலர் மதிப்புடைய சொத்துக்கள் பாழாயின.

இப்போரின் போது ஈராக், குவைத் நாடுகளிலிருந்து எண்ணெயை எடுத்துச் செல்ல முடியாதபடி வளைகுடாவில் கடல் கண்ணிகளை வைத்து அமெரிக்காவை ஈரான் அச்சுறுத்தியது. குவைத்திலிருந்து எண்ணெயை எடுத்துச் செல்ல தனக்கு உரிமை உள்ளதாகக் கூறிக் கொண்டு போர்க் கப்பல்களைக் குவித்து ஈரானை மிரட்டியது அமெரிக்கா. அமெரிக்காவின் அத்துமீறிய செயலை சதாம் கண்டிக்கவில்லை. மேலும் 290 பேர் பயணம் செய்த ஈரானிய பயணிகள் விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்திக் கொன்று விட்டு அது போர் விமானம் என்று தவறாகக் கருதி விட்டதாக மாய்மாலம் செய்த போது, உலகமே இந்தக் காட்டு மிராண்டித் தனத்தைக் கண்டித்த போது சதாம் உசைன் வாயே திறக்கவில்லை.

1988 ஜூலையில் ஈரான்-ஈராக் போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னரும் ஈராண்டுகளுக்கும் மேலாக ஈரானிய போர்க் கைதிகளை விடுதலை செய்யாமல் சித்திரவதை முகாம்களில் சதாம் அடைத்து வைத்திருந்தார். குவைத்தை ஆக்கிரமித்த பிறகு ஏகாதிபத்தியங்கள் ஈராக்குக்கு எதிராக முற்றுகையிடத் தொடங்கிய பின்னரே சதாம் உசைன் ஈரானுடன் எல்லைப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள முன் வந்தார்.

### சதாம் பாணி 'ஜனநாயகம்'!

ஏகாதிபத்தியங்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு போரில் இறங்கியுள்ள இதர அரபு நாட்டு மன்னர்களையும் ஷேக்குகளையும் சர்வாதிகாரிகள், உல்லாச-ஊதாரிப் பேர்வழிகள், பெண் பித்தர்கள் என்று கூறி அந்நாட்டு மக்களை அவர்களுக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு அறைகூவி அழைக்கிறார் சதாம். சதாம் கூறுவதும் கோருவதும் உண்மையானது; நியாயமானது. ஆனால் ஈராக்கில் அவர் எப்படிப்பட்ட ஆட்சியை நிறுவியுள்ளார்? ''பாத்'' எனப்படும் ஒரு கட்சி சர்வாதிகாரமும், நியமன உறுப்பினர்களைக் கொண்ட அதிகாரமில்லாத நாடாளுமன்றமும் தான் ஈராக்கில் உள்ளது. உண்மையில் அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுவது சதாமும் அவரது விசுவாசிகளைக் கொண்ட ''புரட்சிக் கவுன்சில்'' என்ற அமைப்பும் தான்.

இதர அரபு நாடுகளின் சர்வாதிகாரிகளுக்கு எதிராக கலகம் செய்யுமாறு அந்நாட்டு மக்களை அறை கூவி அழைக்கும் சதாம், தனது நாட்டில் சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களை மிருகத்தனமாக



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்கினார். 1982ல் டுஜாயன் கிராமத்தில் சர்வாதிகாரத்துக்கு எதிராகத் தொடங்கிய கிளர்ச்சியை ராணுவத்தை ஏவி சதாம் அடக்கியதில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப் பட்டனர். அக்கிராமமே அழிக்கப்பட்டது.

1988ல் வட பகுதியிலுள்ள குர்திஷ் இன மக்கள் சுய நிர்ணய உரிமையைக் கோரிய போது, அவர்கள் ஈரானுடன் சேர்ந்து கொண்டு சதி செய்வதாகக் குற்றம் சாட்டி பெண்கள், குழந்தைகள் உள்பட 5000 பேரை விஷவாயுவைச் செலுத்திக் கொன்றொழித்தார் சர்வாதிகாரி சதாம். அதைத் தொடர்ந்து வெளி நாடுகளுக்குத் தப்பியோடிய ஒரு லட்சம் குர்திஷ் இன மக்கள் இன்று வரை நாடு திரும்பவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, தனது கருத்துக்கு உடன்படாத அமைச்சர்கள், அதிகாரிகள், ராணுவத் தளபதிகளை ரகசியமான முறையில் சதாம் தீர்த்துக் கட்டினார். தனது தாய் மாமனும், முன்னாள் பாதுகாப்பு மந்திரியுமான ஆதனன் கைய்ரல்லாவைக் கூட சதாம் உசைன் மர்மமான முறையில் கொன்றொழித்தார்.



குர்த்திஷ் இன மக்கள்; சொந்த நாட்டு குழந்தைகளையே ரசாயன ஆயுதம் வீசி பலியாக்கிய சதாம் உசேன்!

### அனைத்து அரபு இஸ்லாமிய தேசிய வாதம் பிற்போக்கானது

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அனைத்து அரபு நாடுகளுக்கும் ஐக்கியப் பட்டு அகண்ட இஸ்லாமிய தேசியத்தை நிறுவி தமது சுதந்திரத்தையும் இறையாண்மையையும் காக்க வேண்டும்; அதற்கான புனிதப் போரில் (ஜிகாத்) இறங்க வேண்டும் என்று அறை கூவுகிறார் சதாம். ஏகாதிபத்தியங்கள் இதை எதிர்ப்பதாலேயே சதாமின் கொள்கை நியாயமாகி விடாது. ஏனெனில் அராபியர்கள் என்பது பூர்வகுடி இனம் (RACE); பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்குடியினரின் தோற்ற இனம். மாறாக அதுவே தேசிய இனமாகி விடாது. கிழக்கே ஈரான் முதல் மேற்கே மொராக்கோ வரை விரிந்து பரவியுள்ள அரபு மொழி பேசும் முஸ்லீம் மக்கள் அனைவரும் ஒரே தேசிய இனம் தான் என்பது அந்தந்த நாட்டு மக்களின் சுதந்திரத்தையும், கலாச்சார மரபுகளையும் மறுப்பதோடு, அந்தந்த தேசிய இனங்களின் சுயநிர்ணய உரியையும் மறுத்து அகண்ட அரபு சாம்ராஜ்ஜியத்தை நிறுவ எத்தனிக்கும் பிற்போக்குத் தனமான வாதமாகும். கிழக்கே பர்மா முதல் மேற்கே ஆப்கான் வரை ஒன்றிணைந்து அகண்ட பாரதமாக்கத் துடிக்கும் இந்து வெறியர்களின் கோரிக்கையைப் போலவே அகண்ட அரபு தேசியமும் சதாம் உசைனின் பிராந்திய மேலாதிக்கத்துக்கான சித்தாந்த அடிப்படையாகும்.

முன்பு ரஷியாவின் ஜார் மன்னன் ரஷியா, போலந்து, செக்கோஸ்லாவியா உள்ளிட்டு அனைத்து ஸ்லாவ் இன மக்களையும் ஒன்றிணைத்து அகன்ற ஸ்லாவிய தேசியம் என்ற பெயரில் தனது ஆதிக்கத்தை நிறுவ முயன்ற போது, இது தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை மறுக்கும் பெருந் தேசிய வாத பிற்போக்குத் தனமான கொள்கை என்று தோழர் லெனின் அம்பலப்படுத்தி உழைக்கும் மக்களை எச்சரித்தார். அது போலவே அகண்ட அரபு தேசியவாதமும் பிற்போக்கானது. முன்பு எகிப்தின் நாசரும், லிபியாவின் கடாபியும் தமது ஆதிக்க நோக்கங்களுக்காக இந்தக் கோரிக்கையைக் கிளப்பினார்கள். இப்போது அதே நோக்கத்துடன் தான் சதாமும் குரல் எழுப்புகிறார்.

### சதாமின் பிராந்திய மேலாதிக்க வெறி

எல்லாவற்றையும் விட, சதாம் உசைன் ஏகாதிபத்தியங்களின் இளைய பங்காளியாகச் செயல்பட்ட பிராந்திய மேலாதிக்கவாதி. இப்போது ஏகாதிபத்தியங்கள் நேரடியாகத் தலையிடுவதை விட, தனது அடியாட் படையாக பிராந்திய மேலாதிக்க வல்லரசுகளை ஊட்டி வளர்த்து அவற்றின் மூலம் தமது நோக்கங்களை சாதித்துக் கொள்கின்றன. தெற்காசியாவில் இந்தியா, இந்தோ - சீன தீபகற்பத்தில் வியட்நாம், வட ஆப்பிரிக்காவில் லிபியா, மேற்காசியாவில் இஸ்ரேல் முதலான பிராந்திய வல்லரசுகளைப் போலவே ஈராக்கும் வளைகுடா பிராந்தியத்தின் ராணுவ மேலாதிக்க துணை வல்லரசு. இத்தகைய மேலாதிக்க நோக்கத்திற்காகவே ஏகாதிபத்தியங்களிடமிருந்து பெருமளவு கடன் வாங்கி நவீன போர் ஆயுதங்களைக் குவித்து நாட்டின் பொருளாதாரத்தையே ராணுவ மயமாக்கினார் சதாம். ஆசியாவிலேயே இந்தியாவுக்கு அடுத்த மிகப் பெரிய ராணுவ வலிமை மிக்க நாடாக ஈராக்கை மாற்றியமைத்தார். நடுநிலை நாடகமாடும் இந்தியா இன்று அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பியதைப் போலவே, அன்று ஏகாதிபத்திய விசுவாசத்தோடு ஈராக்குக்கு ராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து உதவி செய்தது.

ஏகாதிபத்தியங்களின் ஆதரவும், ராணுவ வலிமை மிக்க நாடு என்ற திமிரும் போர் வெறியும் காரணமாகவே முன்பு ஈரான் மீது படையெடுத்தார் சதாம். இப்போரினால் பேரழிவு ஏற்பட்டு ஈராக்கின் பொருளாதாரமே நிலை குலைந்த போதிலும் கூட அவர் தன்னை மாற்றிக் கொண்டு அண்டை நாடுகளுடன் நட்புணர்வைப் பேணவில்லை. மாறாக, இன்று ஆதிக்க வெறியோடு குவைத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார். ஆனால் இது ஏகாதிபத்திய நலன்களுக்கு எதிராகப் போனதாலேயே இப்போது அவை சதாமுக்கு எதிராகத் திரும்பி யுள்ளன.

எனவே எதிரிக்கு எதிரி - நண்பன் என்று கணக்கு போட்டு உலக மக்களின் எதிரியான அமெரிக்காவுக்கு எதிராகப் போரிடுவதாலேயே சதாமை ஆதரிப்பதென்பது உலக மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைக் கொச்சைப் படுத்துவதாகும். சதாம் உசைனை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியாகச் சித்தரிப்பதும், குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பை இரண்டாம் பட்ச விவகாரமாகக் கருதுவதும் சதாமின் ஆதிக்க நோக்கங்களுக்குத் துணை போவதாகும். வளைகுடாவில் ஆதிக்கம் செய்ய அமெரிக்கா போரில் இறங்கியிருப்பது எவ்வாறு நியாயமற்றதோ, அதே போல குவைத் மீதான சதாமின் ஆக்கிரமிப்பும் அநியாயமானது. தனது ஆக்கிரமிப்பை மறைக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு அலையை சதாம் சாதகமாக்கிக் கொள்ள விட்டுக் கொடுப்பதென்பது, அவரது கடந்த கால நிகழ்கால குற்றங்களை நியாயப்படுத்துவதாகவே அமையும்.

● குமார்

**இதர அரபுநாடுகளின் சர்வாதிகாரிகளுக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு அந்நாட்டு மக்களை அறைகூவியழைக்கும் சதாம், ஈராக்கில் 1982-ல் நடந்த சர்வாதிகார எதிர்ப்புக் கிளர்ச்சியை ராணுவத்தை ஏவி அடக்கினார். 1988-ல் சுயநிர்ணய உரிமை கோரிய குர்திஷ் இனமக்கள் மீது விஷவாயுவைச் செலுத்தி 5000 பேரைக் கொன்றார்.**



படிப்பகம்

www.padippakam.com

# பிணந்தின்னியின் ஜனநாயக மோகம்!

ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் நாடு பிடித்தலும் அநீதியான யுத்தமும்தான் ஏகாதிபத்தியங்களின் கொள்கை. இருப்பினும் தமது நோக்கங்களை மறைக்க அவை எப்போதும் ஜனநாயக முகமூடிகளை அணிந்து கொள்ளத் தவறுவதில்லை. அதிலும் உலக மக்களிடம் அம்பலப்பட்டுப் போயுள்ள அமெரிக்கா, குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பைச் சகித்துக் கொள்ள முடியாத உலக மகா ஜனநாயகவாதியாக நாடகமாடுகிறது. ஐ.நா. சபையின் தீர்மானப்படியே இப்போரில் இறங்கியதாக கூறிக் கொண்டு தனது ஆதிக்க நோக்கங்களை மறைக்கப் பார்க்கிறது. ஈராக்கின் ஆக்கிரமிப்பு எந்த வகையிலும் நியாயமற்றதுதான். ஆனால் குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பை கண்டிக்கவோ, எதிர்க்கவோ, அமெரிக்காவுக்கு எந்த அருகதையும் கிடையாது. குவைத்தின் சுதந்திரத்தைப் பற்றிப் பேச அதற்கு யோக்கியதையே கிடையாது. ஏனெனில், அமெரிக்காவே உலகின் மிகப் பெரிய ஆதிக்க வெறிபிடித்த ஆக்கிரமிப்பாளன். உலக மக்களை அச்சுறுத்தும் மிகக் கொடிய அரசு பயங்கரவாதி!

### அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு அட்டூழியங்கள்

வட கொரியாவில் கம்யூனிச ஆட்சி உருவானதும், அதை அழிக்கவும் கம்யூனிஸ்டுகளைப் படுகொலை செய்யவும், அமெரிக்காவும் இதர ஏகாதிபத்தியங்களும் தென் கொரியாவுக்கு தமது இராணுவத்தை அனுப்பி 1950 லிருந்து 53 வரை தாக்குதலை நடத்தின. ஆயிரக் கணக்கான வட கொரிய கம்யூனிஸ்டுகளையும் தேச பக்தர்களைக் கொன்றொழித்த இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்காவே தலைமையேற்றது.

1958ல் லெபனானில் நுழைந்த அமெரிக்கப் படைகள் அந்நாட்டு ராணுவத்துடன் சேர்ந்து கொண்டு அரசு எதிர்ப்பு கலகப் போராளிகளையும் அப்பாவி மக்களையும் கொன்றொழித்தன. 1983 வரை இந்த கொலை வெறியாட்டத்தை அமெரிக்கா தொடர்ந்தது.

1964 லிருந்து 1975 வரை வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கா, உலகில் இதுவரை காணாத அளவுக்கு மனிதப் படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டது. தீக் குண்டுகளை வீசியும், நச்சு வாயுக்களை செலுத்தியும், ரசாயன பொடிகளைத் தூவி விளை நிலங்களைப் பாழாக்கியும் வியட்நாமை மயான பூமியாக்கியது.

1965ல் டொமினிகா குடியரசில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரை அடக்க அந்நாட்டு அதிபரின் அழைப்பின் பேரில் நுழைந்த அமெரிக்க ராணுவம், அரசு எதிர்ப்பு கலகக்காரர்களையும் மக்களையும் ஆயிரக் கணக்கில் கொன்றொழித்தன.

1983ல் கிரனடா மீது படையெடுத்து அந்நாட்டை ஆக்கிரமித்து அடிமைப் படுத்தியது அமெரிக்கா.

ரஷிய ஆதரவுடன் மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் ராணுவ துணை வல்லரசாக வளர்ந்த லிபியாவை அடக்க, 1986ல் அமெரிக்கப் போர் விமானங்கள் லிபியாவுக்குள் ஊடுருவி குண்டு வீசித் தாக்கின. லிபிய அதிபர் கடாபியைக் கொல்லுவதே அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது.

அமெரிக்காவுக்கு போதை மருந்து கடத்துவதைத் தடுப்பதாக கூறிக்கொண்டு 1989 இறுதியில் பனாமாவை அமெரிக்கா ஆக்கிரமித்தது. போதை மருந்து ராணுவ சர்வாதிகாரி நோரிகாவைப் பணிய வைப்பதற்காக, நகரங்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்து பீதியூட்டியது. நோரிகாவை கைது செய்து தனது விசுவாசிகளிடம் அதிகாரத்தை ஒப்படைத்த பின்னரே அமெரிக்கப் படைகள் வெளியேறின.

இதேபோல 1990ல் போதைப் பொருள் ஒழிப்பு என்ற பெயரில் கொலம்பியாவில் அத்துமீறி நுழைந்த அமெரிக்க ராணுவம், கடத்தல்காரர்கள் என்று குற்றம் சாட்டி நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றொழித்தது.

**உலகின் மிகப் பெரிய, ஆதிக்க வெறிபிடித்த அரசு பயங்கரவாதியான அமெரிக்காவுக்கு ஈராக்கின் ஆக்கிரமிப்பைப் பற்றிப் பேச எந்த அருகதையும் கிடையாது. அதன் ஜனநாயகப் பசப்பல்களைக் கண்டு உலக மக்கள் ஏமாந்து விட முடியாது.**

மத்திய அமெரிக்காவில் சுதந்திர ஆட்சியை நிறுவிய நிகரகுவாவின் சான்டினிஸ்டா புரட்சி அரசைக் கவிழ்க்க பொருளாதாரத் தடைகள் விதித்தும், சி.ஐ.ஏ. மற்றும் கூலிப் படையான காண்ட்ராஸ் மூலம் கணக்கற்ற சதிகளை அமெரிக்கா கட்டவிழ்த்து விட்டது.

சைப்ரஸ், மேற்கு சஹாரா முதலான நாடுகளில் படைகளைக் குவித்து அடிமைப் படுத்தியது. அங்கோலாவில் உள்நாட்டுப் போரைத் தூண்டி, ஆயுத - நிதியுதவிகளைச் செய்து தனது விசுவாசிகளை அதிகாரத்தில் அமர்த்தியது.

### காலனிய காட்டுமிராண்டிகளின் ஜனநாயக வேடம்

இப்படி 1950லிருந்து இன்றுவரை உலகெங்கும் தனது மேலாதிக்கத்தை நிறுவ அமெரிக்கா நடத்திவரும் ஆக்கிரமிப்புகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், சதிகள், கொலைகளைப் பட்டியலிட்டு மாளாது. அமெரிக்காவைப் போலவே, அதனுடன் சேர்ந்து கொண்டு வளைகுடாப் போரில் முற்றுகையிட்டுள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலான ஏகாதிபத்திய நாடுகள் ஈராக்கின் ஆக்கிரமிப்பைப் பற்றிப் பேச எந்த தகுதியுமற்றவை. இந்த ஏகாதிபத்தியங்கள் இன்றுவரை சாட், கயனா முதலான பல நாடுகளில் தமது காலனியாட்சியைத் தொடர்கின்றன.

சதாம் உசைனை சர்வாதிகாரி, காட்டுமிராண்டி, அவர் கொல்லப்பட வேண்டும் என்கிறார் புஷ். ஆனால், பிலிப்பைன்சின் மார்க்கோஸ், ஹெய்தியின் டுவாலியர், சிலியின் பினோசெட், ஈரானின் ஷா முதலான கடைந்தெடுத்த சர்வாதிகாரிகளின் கூட்டாளியாக இருந்ததும் இருப்பதும் அமெரிக்கா தான். மேலும் இந்த வளைகுடாப் போரில் ஜனநாயக நாடகமாடும் அமெரிக்காவின் கூட்டாளியாக இருப்பது, அரபு நாடுகளின் சர்வாதிகார மன்னர்களும் ஷேக்குகளும் தான்.

### ஐ.நா. தீர்மானம் அமெரிக்க ஆதரிக்கத்துக்கான மூடுதிரை

ஐ.நா. சபையின் தீர்மானத்தின்படியே, வேறு வழியே இல்லாமல் இப்போரில் இறங்கியுள்ளதாக அமரிக்கா மாய்மாலம் செய்கிறது. "இதுவே அமெரிக்காவின் கடைசிப் போர்; நாளை உருவாகப் போகும் புதிய உலக ஒழுங்கமைப்பின்படி இனி உலகில் போரே இருக்காது" என்று சைவப் புலியாக மாறி உபதேசிக்கிறார் புஷ்.

ஆனால், அமெரிக்காவுக்கு எதிரான எந்தவொரு ஐ.நா. தீர்மானத்தையாவது அமெரிக்கா மதித்தது உண்டா? அமெரிக்காவின் அட்டூழியங்களை உலகின் பல நாடுகள் தொடர்ச்சியாக ஐ.நா. சபையில் கண்டித்தபோது, ஐ.நா. சபையை கலைக்க வேண்டும்; ஐ.நா. சபையைப் பராமரிக்க நிதி தர முடியாது என்று கொக்கரித்து அதற்கு கட்டுப்பட மறுத்தார் முந்தைய அதிபர் ரீகன்.

பாலஸ்தீனம் ஐ.நா. சபையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னரும், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத் நியூயார்க்குக்கு வரமுடியாதபடி "விசா" வழங்க மறுத்தது, அமெரிக்கா. இதனால் அராபத் கலந்து கொள்வதாக இருந்த ஐ.நா.




படிப்பகம்

சபை கூட்டத்தை நியூயார்க்கிலிருந்து ஜெனிவாவில் நடத்த வேண்டியதாயிற்று.

ஐ.நா. தீர்மானத்தின்படி குவைத்தை மீட்க போர் தொடுப்பதாக கூறும் புஷ், ஈராக் மீது வான்வழி, தரைவழித் தாக்குதல் நடத்தவும், சரணடையுமாறு ஈராக்குக்கு காலக்கெடு விதிக்கவும், போரை தொடர்ந்து நீடித்து ஈராக்கை அழிக்கவும் எந்த ஐ.நா. சபையிடம் அனுமதி பெற்றார்? அதைவிட, போருக்கு அஞ்சி நிலவறையில் பதுங்கியிருந்த ஈராக்கிய சிவிலியன் மக்கள் மீது ஏவுகணை வீசி துடிக்கத் துடிக்க கொன்றொழித்த புஷ், எந்த ஐ.நா. சபையிடம் அனுமதி பெற்றார்? மெசபடோமிய நாகரீகத்தின் தொட்டிலான வரலாற்றுச் சிறப்புமிக்க பாக்தாத் நகரை அழிக்க யார் அனுமதி கொடுத்தது? ஐ.நா. தீர்மானத்தை அமெரிக்கா வழுவாமல் பின்பற்றுவதாக இருக்குமானால், ஐ.நா. தீர்மானங்களைத் தொடர்ந்து புறக்கணித்து உறிஞ்ச அமெரிக்கா தொடுத்துவரும் பொருளாதாரத் தடைகளும் தாக்குதல்களும் மிகக் கொடூரமானவை. அதிநவீன போர்க் கருவிகள், அணுகுண்டுகள், ரசாயன ஆயுதங்கள், கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணைகளைக் குவித்துக் கொண்டு, விண்வெளி நட்சத்திரப் போருக்கான தயாரிப்புகளைச் செய்துவரும் அமெரிக்கா இன்றைய உலகின் மிகப்பெரும் ஏகாதிபத்திய அரசு பயங்கரவாதியாக மாறியுள்ளது. தனது ஆதிக்க நோக்கங்களை மறைப்பதற்காகவே வளைகுடாப் போரைப் பற்றிய உண்மைச் செய்திகள் வெளிவராதபடி தடுத்து ஏகாதிபத்திய நிறுவனங்கள் தரும் செய்திகளைச் சார்ந்து நிற்குமாறு இதர நாட்டு செய்தி நிறுவனங்களையும் பத்திரிக்கையாளர்களையும் விரட்டியடிக்கிறது.

எந்த ஒரு பெரிய நாடும் சிறிய நாட்டை ஆக்கிரமிப்பதையும் அச்சுறுத்துவ




**உலகத்தையே அமெரிக்காவுக்குள் திணிக்கும் உலக மேலாதிக்க வெறியன் புஷ்.**

வரும் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு மீது படையெடுக்க வேண்டியதுதானே?

ஐ.நா. தீர்மானம் என்பது அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கான ஒரு மூடுதிரை. உண்மையில் எந்த தீர்மானமும் இல்லாமல் உலகின் பல நாடுகளில் அமெரிக்கா நடத்திய தாக்குதல்கள் ஏராளம். அண்மையில் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள லைபீரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் அதிகாரப் போட்டியில் ராணுவக் கும்பல்கள் மோதிக் கொண்டு ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றொழித்த போது, அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில் எந்த ஐ.நா. தீர்மானமும் இன்றி அமெரிக்கப் படைகள் அத்துமீறி நுழைந்தன.

### ஆதிக்க வெறிபிடித்த பயங்கரவாதி

இராணுவத் தலையீட்டைவிட, ஏழை நாட்டு மக்களின் கடைசி சொட்டு ரத்தத்தையும் அனுமதிக்க முடியாது என்று கூறிக் கொண்டு குவைத்தை மீட்கவே இப்போரில் இறங்கியதாக ஜனநாயக நாடகமாடுகிறது அமெரிக்கா. ஆனால், ஈராக்கை அழித்து, நிரந்தரமாக வளைகுடாவில் அமெரிக்கப் படைகளை நிறுத்தி ஆதிக்கம் செய்யத் துடிப்பதே அதன் உண்மையான நோக்கம். இதனால்தான் ஈராக்கும் ரஷியாவும் முன் வைத்த போர் நிறுத்த நிபந்தனைகளை ஏற்க மறுத்து உக்கிரமாகப் போரைத் தொடர்கிறது.

இனியும் அமெரிக்காவின் ஜனநாயகப் பசப்பல்களுக்கு உலக மக்கள் ஏமாற அடிப்படையே இல்லை. நாடுகளின் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் காக்க, ஆதிக்க வெறி பிடித்த அமெரிக்காவை வளைகுடாவிலிருந்து விரட்டியடிக்க அனைத்துலக மக்களும் அணிதிரண்டு போராடுவதைத் தவிர வேறு வழியுமில்லை.

● குமார்.


## வசந்தத்தின் இடிமுழக்கம்
**(SPRING THUNDER)**

AILRC

அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு மையத்தின் (AILRC) நான்காவது அனைத்திந்திய மாநாட்டுச் சிறப்பிதழ் (ஆங்கிலம்)

- இன்றைய பண்பாட்டுச் சூழல், நமது செயல்பாடுகள் குறித்து செயலர் அறிக்கை.
- தீர்மானங்கள்
- கருத்தரங்கு கட்டுரைகள்
- இன்னும் பல்வேறு அம்சங்கள்

**விலை ரூ.5/-** பிரதி வேண்டுவோர் தபால் செலவுக்குரிய தொகை ரூ.1.50-யும் சேர்த்து சீனிவாசன், புதிய கலாச்சாரம், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை - 600 049. என்ற முகவரிக்கு மணியார்டர் செய்யவும்.



'புதிய ஜனநாயகம்' பற்றிய அறிக்கை
4வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

| | |
|---|---|
| 1. வெளியிடும் இடம் | - சென்னை |
| 2. வெளியிடும் காலம் | - மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் | - திருமதி. ந.ராஜாத்தி |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - நீட் பிரிண்டர்ஸ், 2, ஒளலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002. |
| 4. வெளியிடுபவர் | - எஸ்.மதியழகன் |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. |
| 5. ஆசிரியர் | - எஸ்.மதியழகன் |
| தேசிய இனம் | - தமிழர் |
| முகவரி | - 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. |
| 6. உரிமையாளர் | - எஸ்.மதியழகன் |
| முகவரி | - 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. |

எஸ்.மதியழகனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.3.1991 (ஒப்பம். எஸ்.மதியழகன்), வெளியிடுபவர்.

www.padippakam.com

## உ.பி. - பீகார்:

# கொலைக் கிரிமினல்கள்

**உ.பி. - சௌரா கிராமத்தில் 13 பேர் போலீசாலும், பீகார் - டிஸ்கோரா கிராமத்தில் 15 பேர் நிலப்பிரபுவின் ரகசிய கிரிமினல் படையாலும் படுகொலை செய்யப்பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்களின் உயிருக்கு உத்தரவாதமில்லாத கொலைகார ஆட்சிதான் அங்கு உள்ளது.**

ஜனவரி 14ந்தேதி! இரவு 7 மணி சுமாருக்கு உத்திர பிரதேச - குண்டா பகுதி போலீசு ஆயுதங்களுடன் அருகிலுள்ள பேகன் கோபல்பூர் கிராமத்திற்குள் நுழைகிறது! கிராமத்தில் தேவதாதின் என்பவர் தன் அக்கா மகளுக்கு நிச்சயதார்த்தம் செய்து கொண்டிருக்கிறார். உற்றாரும் உறவினரும் குழுமியுள்ள அவ்வீட்டிற்குள் திபுதிபுவென நுழைந்த போலீசு, விசாரணை என்ற பெயரில் 13 பேரை அள்ளி 'ஜீப்'பில் போட்டுக் கொண்டு விரைகிறது. சௌரா எனும் கிராமத்தருகே வந்ததும் 'ஜீப்'பை நிறுத்தி 13 பேரையும் குருவி சுடுவது போல் சுடுகிறது. சுட்டதில் 2 பேர் உயிர் மட்டும் பிரியாமல் இருந்தது. கூடியிருந்த மக்களை அதட்டி கலைத்துவிட்டு அந்த 2 பேரையும் மீண்டும் சுட்டு பிணங்களோடு சேர்த்தது. கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கூலி ஏழைத் தொழிலாளர்கள்! 10 பேர் தாழ்த்தப்பட்ட 'பாசி' எனும் ஹரிஜன் சாதியினர்! 3 பேர் பிற்படுத்தப்பட்ட குர்மி சாதியினர்!

நடந்த இவ்வுண்மைச் சம்பவம் அனைத்தையும் மறைத்து திரைப்படக் காட்சி போல் புது கதை புனைந்தது போலீசு! இப்படுகொலையை தலைமை தாங்கி நடத்திய இன்ஸ்பெக்டர் நரேந்திர பால் சிங் கூறுவதைக் கேளுங்கள்:

''குண்டாவைச் சேர்ந்த செங்கற் சூளை முதலாளி விஜய்குமார் குப்தாவிடம் இருந்து எங்களுக்கு 'போன்' வந்தது! அலகாபாத்திலிருந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த குப்தாவின் 'ஜீப்'பை வழி மறித்து கொள்ளைக்காரர்கள் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்று! விரைந்து நடவடிக்கை எடுத்தோம்! இரண்டு குழுவாகப் பிரிந்து இரண்டு திசையில் சென்று தேடினோம். நான் தலைமை தாங்கி சென்ற வழியில் அந்த 'ஜீப்'பை கண்டு பிடித்து விரட்டினோம். சௌரா கிராமத்தில் ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்த போலீசுகாரர் நிலைமையைப் புரிந்து கொண்டு 'ஜீப்'பை தடுத்தார். இடையில் மாட்டிக் கொண்ட கடத்தல் கும்பல் 'ஜீப்'பை நிறுத்தி பின்னால் வந்து கொண்டிருந்த எங்களை நோக்கிச் சுடத் தொடங்கியது. நாங்களும் சுதாரித்துக் கொண்டு எங்கள் 'ஜீப்'பையே கேடயமாக பயன்படுத்தி மறைந்து நின்று தாக்கினோம். இருவருக்குமிடையே துப்பாக்கி சூடு தொடர்ந்தது. சிறிது நேரத்தில் கடத்தல்காரர்கள் பக்கம் இருந்து சுடுவது நின்றது. எனினும் எச்சரிக்கையுடன் நெருங்கிப் பார்த்தால் 'ஜீப்'பில் 13 பேர் இறந்து கிடந்தனர்''

கடத்தல்காரர்கள் 13 பேர் தேடுதல் வேட்டையின் போது இறந்ததாக பத்திரிக்கைகளுக்குச் செய்தி கொடுத்துவிட்டு 'கேஸ் பைலை' இழுத்து மூடியது போலீசு!

சம்பவம் நடந்த மறுநாளே அதாவது 15ந் தேதியே தேவதாதின் மனைவி சுமேரா, பிணங்களை போலீசுக்கு அடையாளங் காட்டிவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக கையோடு சென்று பிரதாப்கர் மாவட்ட (பெண்) நீதிபதியிடம் மனு கொடுத்தார். எவ்வித நடவடிக்கையும் இல்லை.

நவேதா கிராமத்து கல்லூ என்பவரின் பிணம் 'அனாதை' என முத்திரை குத்தி பிணப்பட்டியலோடு சேர்த்தது போலீசு. ஆனால் உண்மையில் கல்லூவின் தாய் சகுந்தலா தன் மகனின் பிணத்தை அடையாளங் காட்ட வரமுடியாவண்ணம் மிரட்டி வைத்தது போலீசு. உண்மையை கோர்ட்டுக்குச் சொல்ல முற்பட்டாலோ வீட்டை விட்டு வெளியே வந்தாலோ கல்லூவின் மகளை கடத்தி கொன்று விடுவதாக மிரட்டியது. இதேபோல் சௌரா கிராமத்து மக்களையும் போலீசு மிரட்டியதால் பத்திரிக்கையாளர்களிடம் உண்மையைக் கூறவே அஞ்சினர்.

போலீசு பல வழிகளிலும் உண்மையை மறைக்க முயன்றும் முடியவில்லை. பத்து நாட்களுக்குள் உண்மை மெல்ல மெல்ல வெளிவந்து விட்டது.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் கடத்தல்காரர்கள் என்பதற்கான ஆதாரம் எதுவும் போலீசிடம் இல்லை. 6 பேர் மேல் மட்டுமே சிறு சிறு குற்றங்களுக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதிலும் போலீசு போட்ட பொய்வழக்குகள் சில! போலீசு 'ஜீப்'பில் துப்பாக்கி குண்டு துளைத்ததற்கான தடயங்களோ, துப்பாக்கி குண்டால் பாதிக்கப்பட்ட போலீசோ, சௌரா கிராமத்தில் துப்பாக்கிச் சூடு எதிரும் புதிருமாக நடந்ததற்கான தடயங்களோ எதுவும் இல்லை! போலீசு, கடத்தல்காரர்களிடம் இருந்து கைப்பற்றியதாக கூறும் துப்பாக்கி ஒன்று ஏற்கனவே வேறு ஒரு வழக்கில் சந்தால் என்ற கிரிமினலிடம் இருந்து கைப்பற்றப்பட்டு போலீசிடமிருந்தது! - என்றெல்லாம் பல ஆதாரங்களை பத்திரிக்கையாளர்கள் வெளிக் கொண்டு வந்தும் உ.பி. அரசு கண்டும் காணாமல் இருந்தது.

ஜனவரி 25-ந்தேதி சட்டசபையில் எதிர்க்கட்சிகள் பிரச்சினையைக் கிளப்பிய பின்னரே உ.பி. அரசு நடவடிக்கை எடுத்தது. சி.ஐ.டி. போலீசை விசாரணைக்குப் பணித்தது. விசாரணையில் வேறுவழியில்லாமல் கொலைதான் என முடிவானதும் 12 கீழ்மட்ட போலீசையும் இன்ஸ்பெக்டர் நரேந்திர பால் சிங்கையும் தற்காலிக பதவி நீக்கம் செய்தது! வி.பி.சிங் கட்சி இப்பிரச்சினையைப் பயன்படுத்தி ஓட்டுப் பொறுக்க முயன்றது! துரிதகதியில் 4 நாட்களுக்குள் இப்படி நடவடிக்கை எடுத்து அதை முறியடித்து மார்தட்டியது, முலயாம்சிங் தலைமையிலான ஆளுங்கட்சி!

ஆனால் மாநில - மாவட்ட உயர் போலீசு அதிகாரிகள் மீது உ.பி. அரசு கைவைக்கவில்லை. வி.பி.சிங் எனும் பெயர் கொண்ட போலீசு அதிகாரி (I.G.) இப்படுகொலையை 'தேடுதல் வேட்டை' என சித்தரித்த உள்ளூர் போலீசை பாராட்டி 12 பேருக்கு தலா 500 ரூபாய் பரிசு வழங்கினார். இவர் மீது இதுவரை நடவடிக்கை இல்லை. உண்மையை மூடி மறைத்த பிரதாப்கர் மாவட்ட நீதிபதிக்கும் எவ்வித தண்டனையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் சி.ஐ.டி. அறிக்கையே முழுமையானதாக இல்லை. இப்படுகொலைக்கான காரணம் - பின்னணி என்ன என்பதை ஆராய சி.ஐ.டி. போலீசு அக்கறையே செலுத்தவில்லை! இதைப் பற்றி அரசும் அக்கறை செலுத்தவில்லை!

★ ★ ★

இப்படுகொலைக்குப் பின்னுள்ள உண்மை என்ன?

மகூவா பூவிலிருந்து சட்ட விரோதமாக சாராயம் காய்ச்சியெடுப்பது இங்குள்ள நிலப்பிரபுக்களின் முக்கியத் தொழில்களில் ஒன்று! நிலப்பிரபுக்கள் இத்தொழிலுக்கு பாசி - ஹரிஜனங்களையே ஈடுபடுத்துகிறார்கள். அண்மையில் இத்தொழில் செய்து கொண்டிருந்த தேவதாதின் மற்றும் சிலரும் கூலி பிரச்சினை தொடர்பாக வேலைக்குச் செல்ல மறுத்தனர். இதுவல்லாமல் இவர்கள் சி.பி.ஐ., சி.பி.எம்., இ.ம.மு., முதலிய 'இடதுசாரி கம்யூனிஸ்டு' கட்சிகளின் ஆதரவாளர்கள். இதில் ஜியாலால் சந்தாராம், தேவதாதினின் அண்ணன் ராம்•லக்கன் போன்றவர்கள் அருகிலுள்ள பிஹாரியா கிராமத்தில் ஹரிஜன மக்களுக்காக ரோடு வசதியும், கூலி உயர்வும் கேட்டு நீண்ட காலமாக நிலப்



படிப்பகம்

www.padippakam.com



**உ.பி. சௌரா கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்கள்; கடத்தல்காரர்களைக் கொன்றதாக பெருமையாக 'போஸ்' கொடுக்கும் போலீசு. உள்ளே: கொலை செய்யப்பட்ட ஜியலால் என்பவரின் தாய்.**

பிரபுக்களுக்கு எதிராகப் போராடிய செயல் வீரர்கள்! எனவே, நிலப்பிரபுத்துவக் கும்பல், ராம் லக்கனை 2 வருடத்திற்கு முன்பே கிரிமினல்களை வைத்து தீர்த்துக் கட்டியது. இன்று எஞ்சியிருந்தவர்கள் - புதிய தொல்லைக் கொடுத்தவர்கள் - வேலைக்கு வர மறுத்தவர்கள் ஒன்றாகக் கூடியதை வேவு பார்த்து போலீசை வைத்து கொன்று போட்டுள்ளது.

உ.பி.யில் பிரதாப்கர், கோண்டா, மாவட்டங்களில் பார்ப்பனர், தாகூர் முதலிய மேல்சாதி நிலப்பிரபுக்களும் முஸ்லீம் மத நிலப்பிரபுக்களும் செல்வாக்கு செலுத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட கூலி உழைப்பாளி மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதிலும் கொல்லுவதிலும் ஒன்றுபட்டே நிற்கிறார்கள்! இவர்களுக்கு ஓட்டுக்கட்சிகள் பக்கபலமாக இருக்கின்றன! இப்பகுதியைச் சேர்ந்த காங். எம்.எல்.ஏ. நியாஸ் ஹாசன், இப்படுகொலையைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை! வெளியே தலைகாட்டவே இல்லை! ஏனெனில் கோண்டாவைச் சேர்ந்த ராகவேந்திரா பிரதாப் சிங், ஆனந்த் சிங் மற்றும் பிரதாப்காரிலுள்ள தினேஸ்சிங், அஜய் பிரதாப் சிங், பஜ்ரங் பகதூர் சிங் முதலான நிலப்பிரபுக்கள் காங்கிரசுக் கட்சிக்காரர்கள்!

இப்படுகொலைக்குப் பின்னணியாக இருந்த நிலப்பிரபுக்களை அரசும், ஓட்டுக் கட்சிகளும், பத்திரிக்கைகளும் மூடி மறைக்கவே செய்தன. அதிகபட்சம் போனால் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான மேல்சாதி வெறியர்களின் சாதியப் படுகொலை என சித்தரித்தன.

★ ★ ★

பீகாரில் நடந்த இன்னொரு சம்பவம் இது!

பிப்ரவரி 20ந்தேதி பாட்னாவிற்கு அருகில் உள்ள டிஸ்கோரா கிராமத்தில் 15 கூலி ஏழை விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர். 'கிஸான் சங்கர்ஸ் சமிதி', 'கிஸான் பாதுகாப்புப் புலி' போன்ற தனிவகை ரகசிய - ஆயுதம் தாங்கிய படையினரால் கொல்லப்பட்டனர். யாதவ் சாதி தலைவரும், காங். எம்.எல்.ஏ-வுமான ராம் லக்கன் சிங் யாதவ் என்ற நிலப்பிரபுவின் ரகசியப் படைகள் இவை!

வீட்டு விழா ஒன்றை முன்னிட்டு கூடிய அக்கூலி ஏழை விவசாயிகளை நிலப்பிரபுவின் கொலைகாரப்படை கையிலும், நெஞ்சிலும், தலையிலும் என மாறி மாறி சுட்டுக் கொன்றது. நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடி வரும் இந்திய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் என்பதாலேயே இப்படி கோரமாக கொல்லப்பட்டனர்!

நிலப்பிரபுக்கள் அநியாயமாகவும் அடாவடித்தனமாகவும் சேர்த்த சொத்துக்களுக்கு அரசும், அரசு எந்திரமும் பாதுகாப்பளிக்கின்றன. நிலப்பிரபுத்துவ கொடுமைகளுக்கு எதிராக மக்களைத் திரட்டும் போராளிகளை வேட்டையாடுவதற்கென்றே தனிவகை சட்டவிரோத கிரிமினல் படையையும் நிறுவியுள்ளது நிலப்பிரபுத்துவ கும்பல்! சட்டபூர்வ கிரிமினல் கும்பல் போலீசோடு, சட்டவிரோத கிரிமினல் கும்பலும் சேர்ந்து போராளிகளையும் அப்பாவி மக்களையும் சாதாரணமாக கொன்று போடுகிறது. இதற்கு மேல்சாதி நிலப்பிரபு, பிற்பட்டசாதி நிலப்பிரபு என்று எந்த வேறுபாடும் இல்லை! தமக்கு ஆபத்து என்றால் ஒத்தே செயல்படுகிறார்கள்! ஒன்றுபட்டே நிற்கிறார்கள்!

மேல்சாதி நிலப்பிரபுக்களின் கொடுமைக்கு அன்று தஞ்சை கீழவெண்மணிப் படுகொலையும், இன்று உ.பி. - சௌரா கிராமப் படுகொலையும் உதாரணம்! பிற்பட்ட சாதி நிலப்பிரபுக்களின் கொடுமைக்கு அன்று பீகார் பெல்ச்சி படுகொலையும், இன்று பீகார் - டிஸ்கோரா கிராமப் படுகொலையும் உதாரணம்! நிலப்பிரபுக்களுக்கு சாதியல்ல, வர்க்கம்தான் பிரதான எதிரி! ஏனெனில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே நிலப்பிரபுத்துவத்தை முற்றிலும் துடைத்தொழிக்கும் சக்தி படைத்தது!

○ சுப்பு

*போராளிகளை வேட்டையாடுவதற்கென்றே தனிவகை சட்டவிரோத கிரிமினல் படையையும் நிறுவியுள்ளது நிலப்பிரபுத்துவ கும்பல்! சட்டபூர்வ கிரிமினல் கும்பல் போலீசோடு, சட்டவிரோத கிரிமினல் கும்பலும் சேர்ந்து போராளிகளையும் அப்பாவி மக்களையும் சாதாரணமாக கொன்று போடுகிறது. இதற்கு மேல்சாதி நிலப்பிரபு, பிற்பட்டசாதி நிலப்பிரபு என்று எந்த வேறுபாடும் இல்லை!*

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

விளைகுடாப் போரில் ஈடுபடும் அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவது மட்டுமல்ல; இன்னும் பலவகையிலும் இந்திய அரசு ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறது.போர்க்களத்தில் தடையரண்களாக மணல் மூட்டைகளை அடுக்க சௌதி அரேபியாவுக்கு கோணிப் பைகளை ஏற்றுமதி செய்து வருகிறது. இதன்மூலம் அன்னியச் செலாவணியாக 70 லட்ச ரூபாய் கிடைக்கும் என்று இந்த அயோக்கியத் தனத்தை வெட்கமின்றி நியாயப்படுத்துகிறார் வர்த்தகத் துறை மந்திரி.

மகாராஷ்டிராவின் லாத்தூர் வட்டாரத்தில் கொத்தடிமைகளாக உழன்ற, தாழ்த்தப்பட்ட 'மாங்' சாதியைச் சேர்ந்த இருவரைப் பற்றி சில தன்னார்வக் குழுக்கள் அரசிடம் முறையிட்டு அவர்களை விடுவிக்க உதவினர். ஆனால் விடுதலையான அவர்கள் கடந்த ஒருமாத காலமாக எங்கு சென்றாலும் மேல்சாதியினர் வேலை கொடுப்பதில்லை. கடைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கூடத் தராமல் விரட்டுகின்றனர். கொத்தடிமைகளை விடுதலை செய்தால் மட்டும் போதாது. நிவாரணமும் நிரந்தர வேலை வாய்ப்பும் தரப்படவேண்டும். அவ்வாறின்றி தன்னார்வ குழுக்களின் நடவடிக்கை அவர்களை நட்டாற்றில் தள்ளிவிட்டுள்ளது.

ஆண்டு தோறும் பிப்ரவரி கடைசி வாரத்தில் கர்நாடகத்தில் உள்ள ஷிமோகா மாவட்டத்தில் ரேணுகாம்பா கோயிலில் அப்பகுதியிலுள்ள பெண்கள் நிர்வாண பூசை நடத்துவது வழக்கம். ஐந்தாண்டுகளுக்கு முன்பு இக்காட்டுமிராண்டித்தனம் சட்டப் பூர்வமாகத் தடை செய்யப்பட்டது. ஆனாலும், தார்வார் மாவட்டத்திலுள்ள பயாத்கி எனும் ஊரிலுள்ள மற்றொரு கோயிலில் தொடர்ந்து ரகசியமாக நிர்வாண பூசை நடந்து வருகிறது. வேடிக்கை என்னவென்றால் இந்த ஊர், முதல்வர் பங்காரப்பாவின் சோரப் தொகுதியில் உள்ளது!

ஈழத் துரோகி வரதாராஜ பெருமாள் இப்போது மத்தியப் பிரதேசத்திலுள்ள சந்தேரி என்று சிறு நகரில் பலத்த பாதுகாப்புடன் இந்திய அரசால் ரகசியமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறார். 24 மணி நேர கமாண்டோ படைக் காவலும் டெல்லியுடன் நேரடித் தொலைபேசி வசதியும் கொண்டுள்ள அவர் குடியிருக்கும் மாளிகையில் குளிர்பதன வசதியும் செய்யப்பட்டுள்ளது. இவரையும் இவரது மனைவி - குழந்தைகளையும் பராமரிக்க மத்திய அரசு மாதந்தோறும் 60 லட்ச ரூபாயும், மாநில அரசு 5 லட்ச ரூபாயும் செலவிட்டு வருகின்றன. இங்கே தமிழகத்தில் ஈழ அகதிகள் நிவாரண உதவியும் மருத்துவ வசதியுமின்றி அல்லற்படுகிறார்கள். அங்கே ஈழத்துரோகி பெருமாள் சுகமாக வாழ்கிறார். ஈழ விடுதலையின் மீது இந்திய அரசு கொண்டுள்ள கரிசனையின் வட்சணம் இதுதான்!

போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக, பிச்சை எடுப்பது சட்டப் பூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதைக் கண்டித்து நூற்றுக்கணக்கான பிச்சைக்காரர்கள் தமது குழந்தைகளுடன் பிச்சை தட்டு ஏந்தி ''எங்களையும் வாழ விடுங்கள்'' என்ற கோரிக்கை அட்டையுடன் ஊர்வலமாகச் சென்று, மாவட்டக் கலெக்டர் அலுவலகம் முன் கடந்த மாதத்தில் தர்ணா போராட்டமும் நடத்தியுள்ளனர். போலிக் கம்யூனிஸ்டுகளின் அகராதியில் பிச்சைக்காரர்களை ஒழிப்பதுதான் வறுமை ஒழிப்புத் திட்டம் போலும்!

கடந்த ஜனவரி மாதத்தில் 146 பேர் அமரக்கூடிய தனி விமானத்தில் தனது பேரக் குழந்தைகளுடன் நார்வே மன்னரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த உல்லாசப் பயணமாக பறந்துபோனார், துணைப் பிரதமர் தேவிலால். 40 பேர் செல்லக் கூடிய விமானத்தில் தமிழகத்துக்கு தனியாக வந்து போனார்கள் மத்திய மந்திரிகளான சுப்பிரமணிய சாமியும், சுபோத்கான் சகாயும். இவர்களுக்குத் தலைமை தாங்கும் பிரதமர் சந்திரசேகர் தினமும் இரவில் டெல்லியிலிருந்து புறப்பட்டு 40 கி.மீ. தொலைவிலுள்ள தனது போன்சி பண்ணையில் வந்து தங்கிவிட்டு காலையில் டெல்லிக்குத் திரும்புகிறார். பிரதமரின் காருக்கு முன்னும் பின்னுமாக 30 வாகனங்கள் பாதுகாப்புக்காகச் செல்கின்றன. அவரது ஒருநாள் பயணத்துக்கு மட்டும் குறைந்தது 200 லிட்டர் பெட்ரோல் பாழாகிறது. கடந்த ஜனவரியில் மட்டும் அவர் 69 முறை போன்சி பண்ணைக்கு சென்றுள்ளார். இந்த ஊதாரிக் கும்பல்தான் நாட்டு மக்களிடம் பெட்ரோல் சிக்கனத்தைப் பற்றி உபதேசிக்கிறது.

பம்பாயில் மக்கள் தொகை கணக்கெடுப்பாளர்களுக்கு வீடற்றவர்களை எப்படி கணக்கிடுவது என்பதுபெரிய பிரச்சனையாக உள்ளது. நடைபாதைகளிலும் ரயில் நிலையங்களிலும் தங்கும் இவர்களை இரவு நேரத்தில் மட்டுமே அங்கு பார்க்க முடியும். ஆனால், நள்ளிரவில் போய் யாரும் கணக்கெடுக்கவும் இயலாது. எனவே சில தன்னார்வக் குழுக்களும் சமூக சேவை நிறுவனங்களும் கொடுக்கும் உத்தேசக் கணக்கை அப்படியே அரசுக்கு கணக்கு காட்ட முடிவு செய்துள்ளனர். இதேபோல பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில் எவ்வளவு விபச்சாரிகள் உள்ளனர் என்று கணக்கிட முடியாமல் இதற்கும் சில சமூக சேவை அமைப்புகளின் தயவை நாடியுள்ளனர். தன்னார்வக் குழுக்களின் உத்தேச மதிப்பீட்டின்படி பம்பாயில் 5 லட்சம் வீடற்றோர் உள்ளனர். உண்மையான அளவு இதைவிட அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இப்படி உத்தேச மதிப்பீட்டின்படிதான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஏழ்மையில் உழலும் மக்களைப் புறக்கணிப்பதோடு அவர்களை ஏய்க்கும் அயோக்கியத்தனம் இது.





படிப்பகம்

www.padippakam.com

நாகாலாந்தின் நாகா சோசலிஸ்ட் தேசிய கவுன்சில் (NSCN) என்ற போராளி அமைப்புத் தடை செய்யப்பட்டு ராணுவத்தால் வேட்டையாடப்படுகிறது. ஆனால், நாகாலாந்தின் ஓட்டுப் பொறுக்கிகள், போராளிகள் கோரிக்கையை ஆதரித்து பதவிக்கு வந்தவர்கள். எனவே, நாகா போராளி அமைப்பு எல்லா எம்.எல்.ஏக்களையும் பதவி விலகுமாறும், தமது அமைப்பின் மீதான தடையை நீக்கப் போராடுமாறும் இல்லையேல் அவர்களைக் கருப்புப் பட்டியலில் சேர்த்து அழித்தொழிப்போம் என்று எச்சரித்தது. இதைக் கேட்டு பீதியடைந்த பல எம்.எல்.ஏக்கள் தலைநகரிலேயே தலைமறைவாகிவிட்டனர். முதல்வர் வமுசோ மத்திய அரசுக்குப் பலமுறை கடிதம் எழுதி தடையை நீக்குமாறு கெஞ்சுகிறார். ஓட்டுப் பொறுக்கிகளுக்கு எதிராகப் போராளிகள் மேற்கொண்டிருப்பது பொருத்தமான நடவடிக்கைகள்!





தெற்கு - வடக்கு ஏமன் நாடுகள் ஐக்கியப் பட்டுவிட்டன. கிழக்கு - மேற்கு ஜெர்மனி ஒன்றுபட்டு வல்லரசாக மாறியுள்ளது. அது போல சுதந்திரத்துக்கு முந்தைய நிலையில் இருந்த இந்தியாவும் (பாகிஸ்தான், வங்க தேசம், இலங்கை நேபாளம் ஆகியவற்றைச் சேர்த்து) ஐக்கியப்பட்டு வல்லரசாக மாற வேண்டும். பிரிட்டிஷாரின் போலிச் சுதந்திரம் இந்தியாவைத் துண்டாடி விட்டது. - இப்படிக் கூறுவது அகண்ட பாரதக் கனவு காணும் பாரதீய ஜனதா கட்சி அல்ல. அண்மையில் தனது மாநாட்டை நடத்தி முடித்துள்ள பார்வர்டுபிளாக் கட்சிதான் இப்படி கூறுகிறது. தேசிய இனங்களின் உரிமையை மறுத்து, இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்பு - மேலாதிக்கத்துக்கு துணைபோகும் ஆளும்வர்க்கக் கொள்கையைக் கொண்ட பார்வர்டுபிளாக் கட்சியை இடதுசாரி சக்தியாக வருணித்து, கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்குகின்றனர் போலிக் கம்யூனிஸ்டுகள்.

நாட்டை அன்னிய ஏகாதிபத்தியத்துக்கு விலை பேசும் இந்திய ஆட்சியாளர்கள் இப்போது அன்னியக் கப்பல்கள் இந்தியக் கடலில் மீன் பிடிக்கவும், பதப்படுத்தி ஏற்றுமதி செய்யவும் உரிமம் அளிக்க முடிவு செய்துள்ளனர். இதன்மூலம் ஏராளமாக அன்னியச் செலாவணி கிடைக்கும் என்று நப்பாசை காட்டி, கொச்சி அருகே இத்திட்டத்தைத் துவக்க மத்திய தொழிற்துறை மந்திரி பச்சைக் கொடி காட்டியுள்ளார். ஐ.எம்.எப்.க்கு நாட்டை அடகு வைத்தது போதாது என்று பகிரங்கமாக விற்கவும் துணிந்துவிட்டது தேச விரோத சந்திரசேகர் அரசு.

கர்நாடகத்தின் கூர்க் (குடகு) பழங்குடி மக்களிடமிருந்து வெள்ளைக்காரன் காலத்தில் பறிக்கப்பட்ட அவர்களது நிலங்கள் காபி எஸ்டேட்டுகளாக மாற்றப்பட்டன. தமது சொந்த மண்ணிலேயே அவர்கள் கொத்தடிமைகளாக்கப் பட்டனர். நாடு 'சுதந்திரம்' அடைந்த பிறகும் இந்த நிலை மாறவில்லை. இப்பகுதியில் பெரும் அணைகள் கட்டுவதாலும், மூங்கில் காடுகளை காகித ஆலைக்காக அழிப்பதாலும் அவர்களது வாழ்வே பறிக்கப்பட்டுவிட்டது. குட்டக் குட்ட குனிய முடியாது என்று குடகு வாழ் பழங்குடி மக்கள் இப்போது போராட்டப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளார்கள். ''அகில கொடவா சமாஜ்'' என்ற அமைப்பின் கீழ் திரண்டுள்ள இம்மக்கள், வீதி நாடகங்கள் முதல் பகுதி அளவிலான ஆர்ப்பாட்டங்கள் வரை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மார்ச் 17க்குள் தமது கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் சட்ட சபையை கெரோ செய்யவும் முடிவு செய்துள்ளனர்.

பாஸ்கர் ராம்பாஜி என்பவர் சந்தேகத்தின் பேரில் ஒரு திருட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக் கைதியாக கடந்த 6 மாதங்களாக பம்பாய் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் மீதான வழக்கு தொடர்ந்து தள்ளிவைக்கப்பட்டுக் கொண்டே போனது. கடந்த பிப்ரவரி 18ந் தேதியன்று அவரது வழக்கு கோர்ட்டுக்கு வந்தபோது, மீண்டும் விசாரணை நடத்தாமல் வழக்கைத் தள்ளிவைத்தார் நீதிபதி. தான் தொடர்ந்து விசாரணையின்றி சிறையிலடைக்கப் படுவதைக் கண்டு ஆத்திரமடைந்த அவர், நீதிபதியின் மீது செருப்பை வீசி தனது வெறுப்பை வெளிப்படுத்தினார். உடனே போலீசார் அவரைத் தாக்கி, நீதிபதியை அவமதித்த குற்றத்திற்காக அவர் மீது புதிய வழக்கொன்றைப் போட்டுள்ளனர். ஆனால், ராம்பாஜி, இந்திய நீதித்துறையின் லட்சணத்தை அம்பலப்படுத்திக்காட்டி, நாட்டு மக்களுக்கு ஒரு முன்னுதாரணமிக்க போராட்டத்தையும் அல்லவா கற்றுக் கொடுத்துள்ளார்!






ஆப்கானில் ரஷியாவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தைப் பற்றி படமெடுத்த அகமது என்ற புகைப்படக்காரர், வளைகுடாப் போரைப் பற்றிய படமெடுக்க சௌதி அரேபியாவுக்குச் சென்றார். அவர் போர்க்களத்தை நெருங்கியதும் ஆறு அமெரிக்கப் படைவீரர்கள் துப்பாக்கி முனையில் அவரை மிரட்டி, அவரது வாகனத்தை நாசப்படுத்தி ஓட ஓட விரட்டியடித்தனர். இந்தத் தாக்குதலுக்குக் காரணம், அவர் தனிப்பட்ட முறையில் உண்மைச் செய்திகளை சேகரிக்க முயற்சித்ததுதான். இதேபோல, பிரிட்டிஷ் படை வீரர்களிடம் பேட்டி எடுத்த ஒரு கீழை நாட்டு பத்திரிக்கையாளரும் துரத்தியடிக்கப் பட்டார். சுதந்திரம், ஜனநாயகம் பற்றி சவடால் அடிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் யோக்கியதை இதுதான்!

தமிழ்நாட்டைச் சேர்ந்த நீதிபதி ராமசாமி, பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்தபோது அரசாங்க நிதியை மோசடி செய்து சொத்து சேர்த்த விவகாரம் சந்தி சிரித்தது. இந்த ஊழல் பெருச்சாளி இப்போது டெல்லி உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். இதை எதிர்த்து நீதிபதி ராமசாமியை பதவியிலிருந்து நீக்கவேண்டும்; குறைந்த பட்சம் அவருக்கு பணி எதுவும் ஒதுக்கக் கூடாது என்று கோரிப் போராடி வந்த டெல்லி வக்கீல் சங்கத்தினர் தமது கோரிக்கை ஏற்படாததால் நீதிபதி ராமசாமியின் கோர்ட்டுகளைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளனர். தமிழன் என்ற காரணத்துக்காக நீதிபதி ராமசாமியின் ஊழலுக்கு வக்காலத்து வாங்கிய திராவிடர் கழக வீரமணி இப்போது ''பார்ப்பன சதி!'' என்று கூப்பாடு போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பெருநாட்டுப் புரட்சியாளர்கள் ஐ.நா. பொதுச் செயலாளருக்குப் புதுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளனர். ஐ.நா.பொதுச் செயலாளர் கொய்யார் பெருநாட்டைச் சேர்ந்தவர். எனவே ''சமாதான முயற்சியைக் கைவிட்டு, அமெரிக்காவின் வளைகுடாப் போருக்கு உடந்தையான கொய்யாரே, நீ தாய்நாட்டுக்குத் திரும்பினால், உன்னை அழித்தொழிப்போம்'' என்று பகிரங்கமாக மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். ஏகாதிபத்திய ஏவல் நாய் கொய்யாருக்குப் புரட்சியாளர்கள் விதித்திருப்பது பொருத்தமான தண்டனைதான்.



படிப்பகம்

www.padippakam.com



# 'மார்க்சிஸ்டு' குண்டர்களின் மகத்தான 'சாதனை'!

போலிக்கம்யூனிஸ்டுகளின் ரௌடித்தனத்திற்கு அளவே இல்லாமல் போய் விட்டது. 'மார்க்சிஸ்டு'களைப் பற்றி புரிந்து கொள்ள இனி நாம் மேற்கு வங்கத்திற்கும் கேரளாவிற்கும் போக வேண்டியத் தேவையில்லை; தமிழகத்திலேயே நேரடியாக உணரலாம்! பிற ஓட்டுக் கட்சிகளை விஞ்சும் அளவிற்கு அதிகாரத் திமிர்த்தனம், துரோகத்தனம், ரௌடித் தனத்திற்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள்! அண்மையில் கோவையில் நடந்த இந்த மூன்று சம்பவங்களும் இதைத் தான் நமக்கு உணர்த்துகின்றன.

## மக்களின் மண்டையை பிளக்கும் 'மார்க்சிஸ்டு'கள்!

கடந்த 1-15 டிச.'90 புதிய ஜனநாயகம் இதழில் 'குடிநீர் கொடுக்க மறுக்கும் போலிகளின் திமிர்த்தனம்' என்ற தலைப்பில் விளாங்குறிச்சி பஞ்சாயத்து தலைவர் சுந்தரசாமி(சி.பி.எம்) பற்றி எழுதியிருந்தோம். போதைக்கு 'தண்ணீர்' விற்கும் கள்ளச் சாராய வியாபாரியான சுந்தரசாமி, தனக்கு ஓட்டுப் போடவில்லை என்ற காரணத்தினால் சில வார்டு மக்களுக்கு தாகத்திற்கு தண்ணீர் இல்லாமல் செய்ததை அம்பலப்படுத்தியிருந்தோம். அதன் தொடர்ச்சியாக நடந்தவை:

100 நாட்களுக்கு மேலாகியும் இன்று வரை சில வார்டு மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. சுந்தரசாமி தனது 3-வது வார்டுக்கு தண்ணீரை புதிய இணைப்பு குழாய்(கேட் வால்வு) மூலம் திருப்பி விட்டதே இதற்கு காரணம். இப்பகுதி மக்கள், வார்டு மெம்பர் ஆறுக்குட்டி என்பவர் தலைமையில் கொடுக்கப்பட்ட மனுவை பரிசீலித்து கோவை முன்சீப் கோர்ட்டும் 19-11-90 அன்றே 'கேட் வால்வை' ரத்து செய்யும்படியும் பழைய முறையிலேயே தண்ணீர் சப்ளை செய்யும்படியும் உத்திரவு பிறப்பித்தது. ஆனாலும் சுந்தரசாமி 'கோர்ட் உத்திரவை மதிக்காமல் 'கேட்-வால்வை' ரத்து செய்யாமல் புறக்கணித்தார்.

பகுதி மக்கள் விடாப்பிடியாக எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே கலெக்டர் மற்றும் சேர்மன் அருண் ஆகியோர் முன்னிலையில் இரு தரப்பினரும் கூடி 2-வது, 5-வது வார்டுகளில் இரண்டு 'போர்வெல்' புதிதாகப் போட்டு தண்ணீர் விடுவது என பேசி முடிவெடுக்கப்பட்டது. சுந்தரசாமி, யு.கே.வெள்ளிங்கிரி (சி.பி.எம் - எம்.எல்.ஏ) உட்பட பலர் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு உடன்பட்டனர். அதன்படி 'போர்வெல்' போடும் இயந்திர வாகனங்கள் அழைக்கப்பட்டு ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் உடன்பாட்டில் தான் ஒத்துக் கொண்டதை மீறி செயல்படத் தொடங்கினார் சுந்தரசாமி!

தனது ஆதரவு பகுதியான 3-வது வார்டில் தான் புதிய 'போர்வெல்' இரண்டையும் போட வேண்டும் என தகராறு செய்தார். எவ்வளவோ பேர் பேசிப் பார்த்தும் எதற்கும் இணங்காமல் அடாவடித்தனமாக 'போர்வெல்' இயந்திர வாகனங்களை திருப்பி அனுப்பி விட்டார்.

எனவே, ஆத்திரமடைந்த பகுதி மக்கள் சிலர் சுந்தரசாமியால் அநியாயமாகப் போடப்பட்ட கேட் வால்வை துண்டித்தனர்; அனைத்து பகுதிக்கும் தண்ணீர் கிடைக்கும்படியும் செய்தனர். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சுந்தரசாமி, முன்னாள் (சி.பி.எம்) எம்.எல்.ஏ.வெங்கிடு, சி.ஐ.டி.யு. தலைவர் கணேசன், சி.பி.எம் - கோவை மாவட்டத் தலைவர் தங்கவேலு மற்றும் பலர் உதவியுடன் சுற்று வட்டார பகுதியிலிருந்து சுமார் 300 குண்டர்களைத் திரட்டினார்.

21-1-91 அன்று அதிகாலை இருட்டில் வெங்கிடு தலைமையிலான் ரௌடிக்கும்பல் துண்டிக்கப்பட்ட 'கேட் வால்வை' மீண்டும் இணைத்து விட்டு காவல் காத்து நின்றது. பின்னர் இக்கும்பல் குத்தீட்டி, தடி, வெட்டறிவாள் சகிதம் ஊருக்குள் புகுந்து தமது எதிர் தரப்பினர் வீட்டு முன்பு நின்று அட்டகாசம் செய்தது. அப்பகுதியிலுள்ள பலர் வீட்டின் மீது கல்லெறிந்தும், பந்தலைப் பிரித்தும், பொருட்களைச் சேதப்படுத்தியும் பேயாட்டம் ஆடியது. வெற்றிக்களிப்பில் கூச்சல் போட்டு ஊரையே இரண்டாக்கியது! இத் தண்ணீர் பிரச்சினையை முன்னெடுத்து சென்று போராடிய வார்டு மெம்பர் ஆறுக்குட்டி என்பவரின் வீட்டாரை பெண்கள், குழந்தைகள் என்று பாராமல் தாக்கியது.

இடையில் எதிர்தரப்பினர் போலீசுக்கு தகவல் கொடுத்து வரவழைத்தனர். சப்-இன்ஸ்பெக்டர் மணியுடன் ஆறுக்குட்டி மற்றும் சிலரும் இப்பிரச்னை தொடர்பாக பேசிக் கொண்டிருக்கும் பொழுதே வெங்கிடு, சுந்தரசாமி தலைமையில் 50,60 பேர் அடங்கிய குண்டர்கள் திடீரென்று வந்து தாக்கினர். சப்-இன்ஸ்பெக்டரை தாக்கி கீழே தள்ளி விட்டு எதிர் தரப்பினரை பலமாகத் தாக்கி வெறியாட்டம் போட்டனர். இடையில் புகுந்து தடுக்க வந்த பெண்களையும் தாக்கி விட்டு ஆறுக்குட்டியை உடலெங்கும் வெட்டி படுகாயப்படுத்தினர். கண்ணில் பட்ட பொருட்களையும் சரி, பொது மக்களையும் சரி வெறி கொண்டு தாக்கினர். இதில் ஆறுக்குட்டி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அடிபட்டு விழுந்த சப் இன்ஸ்பெக்டர் அதற்குள் 'ரிசர்வ்' போலீசுடன் வந்து வெங்கிடு மற்றும் சிலர் தலைமையிலான குண்டர்களை கைது செய்து கொண்டு போனார். ஆனால் வெங்கிடு அன்று மாலையே ஜாமீனில் வெளி வந்து தமது கட்சிக்காரர்கள் பலரைத் திரட்டி போலீசைக் கண்டித்து ஊர்வலம் நடத்தினார். கே.தங்கவேலு (சி.பி.எம். மாவட்டத் தலைவர்) தலைமையில் பெண்கள் உட்பட பலர் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம், கண்டனக் கூட்டம் எல்லாம் நடத்தினார்கள். ''வெங்கிடுவை அடித்த காட்டுமிராண்டி போலீசு ஒழிக'' என்று சுவரொட்டியும் ஒட்டினர்.

தாகத்திற்கு தண்ணீர் கேட்ட மக்களுக்கு தடியடி, அரிவாள் வெட்டு! 'மார்க்சிஸ்டு' குண்டர்களைக் கைது செய்த போலீசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம், கோஷம்! - இதுதான் தமது 'புரட்சிப்' பாதையில் போலிகள் அடைந்துள்ள முன்னேற்றம்!

''விளவை இடது கம்யூனிஸ்டின் காலித்தனம்! ஆர்.வெங்கிடு தலைமையில் ரௌடித்தனம்; மக்கள மீது கொலை வெறித் தாக்குதல்'' என்று பகுதி மக்கள் சுவரொட்டி ஒட்டி எதிர்ப்பு தெரிவித்தனர். ஊருக்குள் இருந்து கொண்டு சி.பி.எம். குண்டர்கள் தொடர்ந்து மிரட்டி வருவதாகவும் அவர்களையும் கைது செய்வதோடு ஏற்கனவே கைது செய்தவர்களை வெளியே விடாமல் உரிய தண்டனை கொடுக்கும்படியும் கோரி மேலதிகாரிகளுக்கு மனு கொடுத்தனர். தி.மு.க., ஜனதா தளம், சி.பி.ஐ போன்ற கட்சியின் உள்ளூர் தலைவர்கள் உட்பட அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து கையெ

## போலீசின் கையரிப்பு!

கடந்த 31-1-91 அன்று வளைகுடாப் போரை எதிர்த்து ஆதிக்க வெறியன் அமெரிக்காவையும், பிராந்திய வெறியன் ஈராக்கையும் அம்பலப்படுத்தி கோவை தொழிலாளர் பிரச்சாரக் குழுத் தோழர்கள் சுவரொட்டி ஒட்டினர். அப்பொழுது அங்கு வந்த பி-3 போலீசு நிலைய இன்ஸ்பெக்டர் வெள்ளைச்சாமி ''அமெரிக்காவை எதிர்ப்பதும் தவறு; அமெரிக்காவை ஆதரிப்பதும் தவறு'' என்று கூறி தோழர்களை கைது செய்தார். இந்த மாதிரி போஸ்டர்கள் ஒட்டினால் கைது செய்யும்படி உத்தரவு இருப்பதாகக் கூறினார். பிறகு அன்று இரவு மற்ற தோழர்கள் வந்து இன்ஸ்பெக்டரை சந்தித்து கைதான தோழர்களை விடுவித்தனர். போலீசு நிலையத்தை விட்டு வெளியேறும் பொழுது ஒரு காவலர் கைதான இரு தோழர்களிடமும் தனித்தனியே வந்து ''நம்மை கவனித்து விட்டு போங்கள்'' என்றும் ''காபி சாப்பிட ஏதாவது கொடுங்கள்'' என்றும் கேட்டார். அதற்கு தோழர்கள் இதுபோன்று லஞ்சம் கொடுக்கும் பழக்கம் எங்களுக்கு இல்லை என்று கூறிவிட்டு வந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

முத்திட்ட கூட்டக்குழு சார்பாக இம்மனு கொடுக்கப்பட்டது.

### 'தண்டல்' வசூலிக்கும் போலிகள்!

விளாங் குறிச்சியில் நடந்தது போலவே போலிக் கம்யூனிஸ்டுகளின் அராஜகம் - ரௌடித்தனம் கோவை - கணபதி பகுதியிலும் அதிகரித்துவிட்டது. 13.1.91 அன்று சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த சிலர் பொங்கல் விழாவுக்காக கடைத் தெருவில் நன்கொடை வசூலித்தனர். பாலாஜி அரிசி மண்டி கடையில் கொடுத்த 5 ரூபாயை 'பிச்சைக்கார காசு' என்பது போல் தேவையில்லையென தூக்கியெறிந்தனர். அதற்கு கடைக்காரர் ''நன்கொடை என்பது எங்கள் விருப்பப்படி தருவதே தவிர உங்கள் விருப்பப்படி அல்ல'' என்றதும் அருகிலிருந்த ஸ்டூலை எடுத்து 'ஷோ கேசை' உடைக்க ஓங்கினர். உடனே கடையில் வேலை செய்பவர் வந்து தடுத்து இருவரை உள்ளே இழுத்துக் கொண்டு போனார். வந்தவர்களில் மீதி 4 பேர் தெருவில் கொட்டி வைக்கப்பட்டிருந்த கற்களை எடுத்து தாக்கவே கடைக்காரர் கதவை இழுத்து மூடிவிட்டார். பின்னர் அந்நால்வரும் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன் என்பவரை அழைத்து வந்து கடைக்காரருடன் சமாதானம் பேசி அந்த இருவரையும் அழைத்துப் போனார்கள்.

ஆனால் பிரச்சினையை இத்தோடும் முடிக்காமல் இரவு 9 மணிக்கு ஆட்களை



திரட்டிக் கொண்டு வந்து கடைகளை தாக்கினர். அரிசி மண்டி மட்டுமல்லாமல் குமரன் மளிகைக் கடை, தீபம் பேன்சி ஸ்டோர் முதலான பல கடைகளையும் ஒரு S.T.D - டெலிபோன் பூத்தையும் தாக்கி சேதப்படுத்தினர். விமல் தீப் எனும் துணிக்கடையில் வைக்கப்படிருந்த 'கூல்ட்ரிங்ஸ்' பாட்டில்களை எடுத்து மற்ற கடைகளை தாக்கவே இதை அக்கடை உரிமையாளர் குழந்தைராஜ் என்பவர் தடுத்தார். கையில் இருந்த பைப் துண்டால் தாக்கி அவரை காயப்படுத்தினர்.

இந்த ரௌடிக் கும்பல் திரும்பிச் சென்ற பொழுது C.M.S. பள்ளிக்கு முன்னால் உள்ள கணேஷ் பேக்கரியையும் வேறு ஒரு சம்பவத்தின் தொடர்பாக தாக்கி வஞ்சம் தீர்த்துக் கொண்டது. இக்கடையின் 'ஷோ கேஸ்', கண்ணாடி போன்ற ரூ.15,000 மதிப்புள்ள பொருட்களை சேதப்படுத்தி விட்டு சென்றது. அனைத்தும் முடிந்த பிறகு சி.பி.எம் - எம்.எல்.ஏ.வான வெள்ளியங்கிரி வந்து கடைகாரர்களைப் பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச் சென்றார். பாவம் இவர்! கடைக்காரர்கள் இதை நம்பி விடுவார்கள் என்று எதிர்பார்த்தார். ''புரட்சி பேசும் கட்சியின் லட்சணம் இதுதானா?'' என்று கடைக்காரர்கள் உமிழவே செய்தனர்.

### தொழிற்சங்க ரௌடித்தனம்

தொழிற்சங்கத்தையும் களமாகப் பயன்படுத்தி அங்கும் தங்கள் ரௌடித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர், 'மார்க்சிஸ்டுகள்'! 'டெக்ஸ்டூல்' கம்பெனியில் குசேலர் தொழிற்சங்கத்தின் குட்டித் தலைவர் ஒருவர் கேட் கூட்டத்தில் ''அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களுக்கு துரோகம் செய்கின்றன; அதன் தலைவர்களை செருப்பால் அடிக்க வேண்டும்'' என்று பேசினார். இதற்கு கூட்டம் போட்டு பதில் சொல்ல திராணியற்ற போலிகளின் தொழிற்சங்கத் தலைவர்கள் (C.I.T.U.) அணிகளைத் தூண்டிவிட்டனர். C.I.T.U. -வைச் சேர்ந்த 6 பேர் அந்த நபரை சூழ்ந்து கொண்டு செருப்பால் அடித்தனர். இதையடுத்து ஒருநாள் முழுவதும் குசேலர் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை.

தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, கோவை.

# பதுக்கல் பேர்வழிக்கு பாதுகாப்பு போராளிகளுக்கு பொய் வழக்கு

வளைகுடாப் போர் தொடங்கியதுமே பெட்ரோலிய பொருட்களை கள்ள மார்க்கெட் பேர்வழிகள், வர்த்தகச் சூதாடிகள், முதலாளிகள் பதுக்கத் தொடங்கினார்கள். ரேடியோ - டி.வி மூலம் பதுக்கல்காரர்களுக்கு அரசு எச்சரிக்கை கொடுத்ததே ஒழிய கண்ணுக்குத் தெரிந்தும் பதுக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் நகரங்களில் சாதாரண மக்கள் மட்டுமல்ல கிராமங்களில் விவசாயிகள் வரை பரவலாக பாதிக்கப்பட்டனர். உசிலை வட்டாரத்திலும் சொந்த உபயோகத்திற்காகவும் விற்பனைக்காகவும் வர்த்தக சூதாடிகளும் முதலாளிகளும் டீசலை பதுக்கி வைக்கவே, தண்ணீர் இறைக்கும் எஞ்சினுக்கு டீசல் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டனர்; 'பெட்ரோல் பங்க்'கில் நீண்ட வரிசையில் மணிகணக்காக காத்துக் கிடந்தனர். எனவே இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க திட்டமிட்டது, இப்பகுதியிலுள்ள விவசாயிகள் விடுதலை முன்னணி!

இப்பகுதி பெரிய பஸ் முதலாளி T.R.M.S. மில்லில் 27 பேரல் டீசலை பதுக்கி வைத்திருந்தார். 5-2-90 அன்று வி.வி.மு.-வினர் உசிலை ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பாக கூடி T.R.M.S. மில்லில் உள்ள பதுக்கப்பட்ட டீசலை எடுத்து விநியோகிக்கப் போவதாகக் கூறி மக்களிடம் ஆதரவு கேட்டு தோழர் குருசாமி தலைமையில் தெருமுனைப் பிரச்சாரம் செய்தனர். பின்னர் ஊர்வலமாகச் சென்று T.R.M.S. மில்லில் இருந்து 5 டீசல் பேரல்களை உருட்டி வந்து (ஒரு பர்லாங் தூரத்திலுள்ள) ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு விநியோகிக்க முற்பட்டனர். அதற்குள் போலீசு வந்து தடுத்து தோழர்களை, பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று ஸ்டேசனுக்கு அழைத்தது. கூடியிருந்த 300-க்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் நிலைமையை விளக்கி பேசிவிட்டு தோழர்கள் பேச்சு வார்த்தைக்குப் போனார்கள்.

ஆனால், ஸ்டேசனில் தோழர்களை நைச்சியமாக மிரட்டி பணிய வைக்க முயற்சித்தது போலீசு! ஆர்.டி.ஓ., தாசில்தார், T.R.M.S. விசுவாசிகள் உட்பட பலர் வந்து ''சமாதானமாகப் போங்கள்; இல்லையெனில் உங்களுக்குத் தான் பிரச்சினை; ஏனெனில் 4, 5 பஸ் வைத்திருப்பவர்கள் 27 பேரல் டீசல் வைத்திருப்பது சாதாரணமான விஷயம் தான். சட்டப்படியே இந்த டீசலை வைத்திருக்கிறார்கள்'' என்றனர். ''சரி அதை எழுதிக் கொடுங்கள்'' என்று தோழர்கள் கேட்டதும் அரண்டு போய் வாயடைத்துப் போனார்கள்.

தாசில்தார், ஆர்.டி.ஓ. மற்றும் 'பெரியவர்கள்' சொன்ன சமாதானத்திற்கு வி.வி.மு.-வினர் உடன்பட மறுத்ததால் திருட்டு குற்றம் உட்பட 7 பிரிவுகளில் பொய் வழக்கு போட்டு சிறையிலடைத்தது போலீசு!

சிறையில் கைதிகளுக்குரிய (ரேஷன் அளவு) உணவு வழங்கப்படவில்லை. ஒரு கைதிக்கு ஒதுக்கப்பட்ட உணவு அளவையே பலருக்கு பகிர்ந்தளிக்கும் கொடுமை நடந்தது. தோழர்கள் இதற்கு எதிராக குரல் எழுப்பி தட்டிக் கேட்டனர். அதற்கு சிறையதிகாரி, ''உண்மையில் உணவுப் பொருட்களை நாங்கள் திருடவில்லை; காண்டிராக்ட் காரர்கள் தான் கொள்ளையடிக்கிறார்கள்'' என்று கூறினார். பின்னர் கைதிகளுக்கு வழங்கிய உணவை (சிறிதளவே) கூட்டிக் கொடுத்தார்கள். 3-வது நாள் தோழர்கள் ஜாமீனில் வெளி வந்தனர்.

அடுத்து, 14-2-90 அன்று உசிலையில் வி.வி.மு. பொதுக் கூட்டம் நடத்தியது. பொதுக் கூட்டத்தில் டீசலை பதுக்கிய T.R.M.S.முதலாளிகளையும் அவருக்கு துணை போனவர்களை அம்பலப்படுத்தியும், வளைகுடாப் போர் மற்றும் தி.மு.க ஆட்சிக் கலைப்பில் நமது நிலைப்பாடு பற்றியும் தோழர்கள் கே.பி.ராமசாமி, கதிரவன், மாது ஆகியோர் உரையாற்றினர். 400க்கும் மேற்பட்ட மக்கள் கூடி ஆதரவளித்தனர்.

பகுதியில் வி.வி.மு-வின் தொடர்ச்சியான நடவடிக்கையையும், போர் குணமிக்க போராட்டங்களையும் வரவேற்று பெருவாரியாக நிதியுதவி கொடுத்து மக்கள் ஆதரித்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஒளலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com












# இதுதான் இன்றைய இந்தியா

இந்த பொம்மைகள் இந்திய அரசியல்வாதிகள் ஒவ்வொருவரையும் கேலி செய்கின்றன! நசீப்காந்தி, ஜந்துசேகர், சந்திலால், கோட்டாலா, விஸ்பால் சிங், லார்வானி - இவைதான் இப் பொம்மைகளின் பெயர்கள்! நௌதான்கி என்ற கிராமியக் கதைப் பாடல் வடிவில் ரமேஷ்சர்மா என்பவரால் எடுக்கப்பட்ட 'தாரக் தாம் தாம்' எனும் பொம்மலாட்ட - வீடியோ திரைப்படம்!

ரத வியாபாரியாக வரும் லார்வானி; ''இந்த ரதம் வாங்குபவர்களுக்கு 2 'டின்' வன்முறை இனாம்'' என்று கூவி விற்கிறார். சைக்கிள் 'பஞ்சர்' பார்க்கும் விஸ்பால் சிங், இரவில் சாலையிலேயே ஆணிகளைப் போட்டுவிட்டு பகலிலே பஞ்சராகும் சைக்கிளுக்கு ஒட்டிக் கொடுத்து சம்பாதிக்கிறார்.

தமது பால் பண்ணையிலே கலப்படம் செய்து விற்கும் பால் வியாபாரிகளாக சந்திலால் கோட்டாலா! கடையின் கதவை பாதி மூடிக் கொண்டு 'விரைவில் திறக்கப்படும்' என்று நிற்கும் மளிகைக்கடை வியாபாரியாக நசீப் காந்தி!

— இப்படி பல கதாபாத்திரங்கள் இந்திய அரசியலை ஆட்டிப்படைக்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் நடைமுறையை கோமாளித்தனங்களை கேலி செய்கின்றன. 'ஓட்டு வங்கி கொள்ளையர்கள்' 'நேதாமண்டி' ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கிய 'தாரக் தாம் தாம்', அரசியல் தலைவர்கள் ஓட்டுக்காக செய்யும் பித்தலாட்டங்களை வேடிக்கையாக தோலுரிக்கிறது. ஓட்டுக்கட்சித் தலைவர்களின் நேர்மை, நாணயம், புனிதம் எல்லாவற்றையும் கேள்விக்குறியாக்குகிறது!

ஓட்டுக் கட்சித் தலைவர்களின் கபட வேடத்தை திரைகிழிக்கும் இதுபோன்ற எளிமையான கலைவடிவங்களையும் - கருத்துக்களையும் கண்டு நடுங்கும் அரசு இப்படத்திற்கு தடை விதித்துள்ளது. தனி நபர்களை அவதூறு செய்து தவறான கருத்தைப் பரப்புவதாக, வன்முறையை தூண்டுவதாக கூறி தடைவிதித்த 'இந்திய சென்சார் போர்டு'க்கு எதிராகப் போராடினார் ரமேஷ் சர்மா! பின்னர் திரைப்பட சான்றிதழ் வழங்கும் மேல்முறையீட்டை நடுவர் மன்றத்திற்கு மனுகொடுத்து படத்திற்கு 'யு' சான்றிதழைப் பெற்றார்!

இதோ இப்படத்தைப் பாருங்கள்! கிழவியைக் கட்டிப் பிடிப்பது, குழந்தைக்கு முத்தமிடுவது - பெயரிடுவது, பழங்குடியினரோடு நடனமாடுவது, திருமணம் நடத்துவது, இந்து கோயிலுக்குப் போனால் விபூதிப்பட்டை - மாலை; தர்க்காவிற்குப் போனால், குல்லாய்... இவைதானே அரசியல்வாதிகளின் நடைமுறை? அன்பு, பாசம், மனித உறவு, மனித உணர்வு அனைத்தையும் இப்படித்தானே வேடமிட்டு கொச்சைப் படுத்துகிறார்கள்? ஓட்டுக்காக என்றால் தங்களை கோமாளிகளாக்கிக் கொள்கிறார்கள். சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் ஒருவரை ஒருவர் அடிப்பது கடிப்பது, வேட்டி - சேலையை உருவுவது, சபாநாயகர் மடி மீது அமர்வது, மேசைமீது 'டான்ஸ்' ஆடுவது போன்ற காட்சிகளை அரங்கேற்றுபவர்கள் யார்? சர்க்கஸ் கோமாளிக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்ல; இவர்கள்!

ஆனால், அரசியல் தலைவர்களின் புனிதம் கெட்டதாக ஒப்பாரி வைத்து தடைவிதிக்கிறது அரசு. இக்காரியக் கோமாளிகளை இன்னும் நாம் சகித்துக் கொண்டிருந்தால், அவமானம் நமக்குத்தானே?!








படிப்பகம்